கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தமிழ்க்குலமே தெளிக!

எங்குமுள பரம்பொருளைக் கோவிலுக்குள்—
கருவறைக்குள் இருத்தியதாய் எண்ணி யங்கே
தங்குமொரு சொறிபிடித்த பார்ப்பானை—
ஆரியனைத் தரகனெனக் குந்த வைத்து
முங்கியடித் தவன்முன்னே பழந்தேங்காய்த்
தட்டெடுத்து நீட்டி,அவன் முணுமு ணுக்கும்
வெங்காய மந்திரத்தை விரும்பியதா
லன்றோ,நாம் இன்றுவரை வீழ்த்தப் பட்டோம்!

கோவிலினைச் சமைத்தவர்நாம்! படிமமொன்றை
நட்டவர்நாம்; பொன்மணிகள் கோடிக் கோடி
மேவலுற இழைத்தவர்நாம்; ஆண்டு தோறும்
விழாப்பலவும் எடுத்தவர்நாம்; மெய்த்தொண் டென்றே
காவலராய் அமர்ந்தவர்நாம்; சேர்ப்பவர்நாம்;
காப்பவர்நாம்! கடைகெட்ட பார்ப்பான் மட்டும்
தேவனென உட்புகுந்து தின்பதுவோ?
தெறிப்பதுவோ? தமிழ்க்குலமே, தெளிவாய் இன்றே!

சுவடி: 9. ஓலை: 5. விலை: 75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

0: 270: தமிழ்ப்பாவல! வணக்கம். முதற்கண் எம்மைப் பற்றிச் சில .... தொண்டில் பழுத்தபழம் தன்னேரிலாத் தன்மானப் பெரியாரின் குமுகாயப் பகுத்தறிவுச் சீர்திருத்தக் கொள்கையுணர்வும், பேரறிஞர் அண்ணாவின் தள்ளாத் தமிழுணர்வும், தமிழ்ப்பண்பும், பெருந்தலைவரது தொண்டுணர்வும் கொண்டு தஞ்சைக் கல்லூரி ஒன்றில் அறிவியல் விரிவுரையாளனாக ஒல்லும் வகையால் ஒண்தமிழுக்குத் தொண்டாற்றியும், மாணவர்க்கு இனவுணர்வும் "தென்மொழி" உணர்வும் கொளுத்தி வருகின்றேன். "தென்மொழி" தோன்றிய காலந்தொட்டு, யான் கல்லூரி மாணவனாயிருந்த காலந்தொடங்கி "தென்மொழி" விற்பனையைக் கூட்டியும், கொள்கை பெருக்கியும், உ. த. க. கிளை தோற்றுவித்தும் திருக்குறள் தமிழ் மரபுரை யாத்த பாவாணர்க்குப் பாராட்டுக் கூட்டங்களும், மாணவரிடையே, மக்களிடையே நடாத்தியுமுள்ளேன். அண்மையில் தஞ்சை, திருக்காட்டுப்பள்ளி ஆகிய இடங்களில் நடந்த பாவாணர் கூட்டங்கட்கு நன்கொடையும் தண்டித் தந்துள்ளேன். இனியும் எம் பணி தொடரும். வறுமையிலும் வாடாச்செம்மையோடு தமிழ்த்தொண்டாற்றும் தகைசால் தளரா நும் பணிக்கு எம்முடைய ஆக்கமும் ஊக்கமும் என்றுமுண்டு. புல்லையும், நூலையுங் கொண்டே ஏமாற்றிய ஆரிய நச்சரவங்களும் ஆரிய மாயையும் வேரூன்றியிருந்த ஞான்று சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும், ஆமைகளாய், ஊமைகளாயிருந்த கேடுகெட்ட தமிழனுக்கு இனவுணர்வும், தமிழுணர்வும் ஊட்டியவன் எவன்? தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவுந்தாம் என்பதை உலகமே உடன்படுமே. அவர்கள் ஆற்றிய எழுச்சியில், புரட்சியில் தொண்டில் பத்து விழுக்காடு கூட உம்மாலும், எம்மாலும் இனி எவராலும் ஆற்ற இயலாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி தானே! ஒட்டாரை ஒட்டிச் செயல்வகை முடித்தலே நன்று. ஒல்லாக்கால் செல்லும் வாய்நோக்கிச் செயல் முடித்தலே அறிவுடையார் ஆள்வினையாம். ஆட்சியிலிருப்பவன் தன்மானத் தமிழனேயன்றித் தறுதலைப் பண்டாரப் பாரப்பனனோ, அவர்தம் அடிவருடியோ அல்லன். சிதம்பர மாணவர் நிகழ்ச்சி கண்டு உள்ளங் கலங்கல் வேண்டா! இக்கால மாணவர் செயலை யார் பொறுப்பார்? யார் போற்றுவார்? யார்தான் வரவேற்பார்? அண்மையில் தஞ்சையில் ஆக. 30-செப். 2 நாட்களில், இருகல்லூரி மாணவர்கட்கு நடந்த வரவேற்பும், வசைமாரியும், இழிசெயலும் கண்டு யாரும் வருந்தாமை கண்டு தெளிக. குற்றங்குறைகளிருப்பின் நிறைவுபடாது கூறுக. ஆனால் அதனையே நும் தொழிலாக்கல் வேண்டா. நல்லன செய்தற்கு முயற்சியுடையீராயினும் அல்லன செய்யற்க.

—தி. இளமாறன் எம். எசி., மா. வளவன் எம். ஏ., பி. தி.,
திருபுட்பங்கல்லூரி, பூண்டி.

0: 271: எந்த அரசும் தன்நாட்டுக் குடிமக்களை அதுவும் மதுவையே எண்ணாத, எண்ணிப் பார்க்காதவர்களை மதுவுண்ண

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க)

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 9: ஓலை: 5.

மடங்கல். தி. பி. உ00உ – (செப்டம்பர். – 1971.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்.

அண்மையில் கோவையினின்று அறிவியலறிஞர் உயர்திரு. கோ. துரைசாமி (நாயுடு) அவர்களிடமிருந்து தென்மொழிக்கு ஒரு மடல் வந்தது. அதில் அவர், 'தமிழ் மொழியில் ஏற்கனவே கலந்துள்ள பிறமொழிச் சொற்களை அப்படியே விட்டு விட்டு இனி மேல் கலவாமல் பார்த்துக் கொள்வது நல்லதில்லையா? "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே" என்றபடி இன்றுவரை கலந்திருப்பதை அப்படியே விட்டு விட்டால் என்ன?' என்று கேட்டும், இது பற்றித் தென்மொழியின் விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புவதாகவும், எழுதியிருந்தார். தெரிந்தே கேட்கின்ற இவரைப்போல், தெரியாமல் கேட்கின்ற அன்பர்கள் பலரும் ஆங்காங்கே இருப்பாராகையால், அவர்களனைவரும் அறிந்து கொள்ளுதற் பொருட்டு, அவர்க்கு விடுக்க வேண்டிய விடையை வெளிப்படையாகவே இங்கு எழுதி விட முன் வந்தேன்.

அறிஞர் கோ. து. நா. அவர்கள் நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர். **தென்மொழியின்** பால் தனி அக்கறை கொண்டவர். பல நிலைகளில் அதற்கு நன்கொடை நல்கித் துணை நின்றவர். அவர்களின் புதியது புனையும் அறிவாற்றலை உலகமே அறியும். பழமைசான்ற அறிவியல் கருவிகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய்க் கால வெள்ளத்தினூடே நழுவிப்போவதையும், அவற்றிற்கும் மேம்பட்ட நிலையில் புதிய புதிய கருவிகள் எதிர்நோக்கி வந்து கொண்டிருப்பதையும் நேர்முகமாகக் காணுகின்ற வாய்ப்புடைய அறிவியல் அறிஞரான அவர்க்கு, மொழித்துறையிலும் இப்படிப்பட்டதொரு மாற்றம் நிகழ்ந்தால் என்ன? எதிரேறி வருகின்ற மொழியியல் மாற்றங்களை ஏன் நாம் தடுத்து நிறுத்திவிட்டுப் பழமையையே பாராட்டிக் கொண்டிருக்கவேண்டும்? என்பன போன்ற கேள்விகள் எழத்தான் செய்யும். அப்படிக் கருதுவது அவர்க்கு இயல்பே. ஆனால் அவர் கூற்றுப்படி அறிவியல் துறை போலும் கருதப் பெறுவதா மொழியியல் துறையும், என்பதைப் பற்றி நாம்தான் சிறிது எண்ணிப் பார்த்தல் வேண்டும். அறிவியல் மாற்றம் அல்லது வளர்ச்சி என்பது வேறு. மொழியியல் கலப்பு அல்லது வளர்ச்சி என்பது வேறு. அறிவியல் துறையில் பழையன கழிதலும் புதியன புகுதலும் நாள்தோறும்–ஏன்–நொடிதோறும் நடந்துகொண்டே இருக்கின்றன–இருக்கத்தான் செய்யும். அவ்வாறு நிகழ வில்லையானால் அறிவியல் நிலைகுன்றி விடும். ஆனால் மொழியியல் துறையில் அவ்வாறு நிகழும்படி விட்டால் மொழி நிலைகுலைந்து விடும்; இன்றைய மொழி நாளைக்கு விளங்காமல் போய்விடும். இவ்விடத்திய மொழி பிறிதோரிடத்தில் உள்ளவனுக்குப் புரியாமற் போய்விடும். இப்பெரிய வேறுபாட்டுக்குக் காரணியம், அறிவியல் மாற்றங்கள் எங்கு நிகழ்ந்தாலும் எவரால் நிகழ்த்தப் பெற்றாலும் ஓர் அடிப்படையை ஒட்டித்தான் நடைபெறல் வேண்டும். உறைதல் நிலைக்கு ஒரு பொருளைக் குளிர்வித்தாலொழிய அப்பொருளைக் கடினப் பொருளாக மாற்றுதல் எவர்க்கும் இயலாது. அல்லது உருகுதல் நிலைக்கு அப்பொருளைச் சூடேற்றினால் ஒழிய அப்பொருளை நீர்மமாக எவராலும் மாற்றிவிட முடியாது. இவ்வடிப்படை நிலைகளே இயற்கைச் சட்டங்களாக இருந்து அறிவியல் மாற்றத்திற்கு—அல்லது வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன. இச் சட்டங்களை எவரும் தம் விருப்பம் போல் மாற்றிக் கொள்ள முடியாது. எந்த மொழிக்காரன் ஆனாலும்—அல்லது எந்த நாட்டவன் ஆனாலும் இச்சட்டங்கள் வழியே அவன் நடந்தாகல் வேண்டும். ஆனால் மொழித்துறையில் வகுக்கப்படும் சட்டங்கள் இயற்கைச் சட்டங்கள் அல்ல; செயற்கைச் சட்டங்கள்! ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு வகைச் சட்ட திட்டங்கள். அவ்வச் சட்டங்களும் அவ்வம் மொழியில் உள்ள பேரறிஞர்களால் அப்பொழுதைக்கப்பொழுது படைத்துக் கொள்ளப் பெறுவன. ஒரு மொழிஅறிஞர்களால் அவ்வாறு காலங்காலமாய்ச் சரியென்று ஏற்றுக்கொள்ளப் பெற்ற அம்மொழியியல் சட்டங்களை வேற்று மொழிக்காரர் ஒருவர் திடுமென உடைத்து விட முடியாது. மாற்றம் தேவை — இன்றியமையாதது என்று கருதினால் அந்த மாற்றங்களை அம்மொழியில் உள்ள அறிஞர்கள் ஒப்ப வேண்டும். அவ்வொப்புதலைக் காலமும் உறுதிப்படுத்து

தல் வேண்டும். அவ்வாறு அச்சட்டங்கள் உறுதிப்படுத்த வில்லையானுல், அம்மொழியை அரைகுறையாகப் பேசத்தொடங்கிய ஒவ்வொருவனும் தன் தன் அறியாமைக்குகந்தவாறும், சோம்பலுக்குத் தக்கவாறும் அம்மொழியில் உள்ள சட்டங்களை நீக்கிவிட்டுப் புதிய புதிய சட்டங்களைக் கொண்டு வந்த வண்ணமாகவே இருப்பான். அக்கால் ஒரு காலத்தவன் மொழியை—அல்லது ஓரிடத்தவனின் ஒரே மொழியை இன்னொரு காலத்தவனே — இன்னோர் இடத்தவனே அறிய முடியாமற் போய்விடும். மொழியை அறிய முடியாமற் போகுமேயானுல் கருத்தையும் அறிய முடியாமற் போகும். இந்நிலை, மொழியியல் துறையில் அறிவியல் துறை போலும் இயற்கைச் சட்டமில்லையானுலும், செயற்கைச் சட்டத்தையேனும் நாமே இயற்கைச் சட்டம் போல் வலியுறுத்திக் கூறல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றது இல்லையா?

இனி, மொழியலில் உறுதிப்படுத்திக் கொள்ளும் நெறிமுறைகள் என்பன வேறு. அம்மொழியியற் கலப்பு என்பது வேறு. **பழையன கழிதலும், புதியன புகுதலும்** என்னும் தொடரில் ஒரு மொழியில் – அம் மொழியிலக்கண நெறிமுறையில் புதியதாகச் செய்து கொள்ளப் பெறும் அல்லது கைவிடப்பெறும் சொல்லாக்கங்கள், சட்ட திட்டங்கள் முதலியவற்றைத்தான் குறிப்பிடப் பெறுகின்றனவே தவிர, அம்மொழிக்குத் தொடர்பில்லாதனவும் வேற்று மொழிக்குத் தொடர்புள்ளனவுமான நெறிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்றே, வேற்றுமொழிச் சொற்களைக் கலந்து கொள்ள வேண்டுமென்றே கூறப்பெறவில்லை. நம் நாட்டுச் சட்ட திட்டங்கள் அல்லது நம் நாட்டு நாணயங்கள் பிறநாடுகளில் எடுபடாததுபோல், நம் மொழிக்குள்ள வகுபாடுகள் பிற மொழிக்கு உரியன ஆகா. மொழியிலக்கணத்தில் மொழிக்கலப்புப் பாராட்டப் பெறுவதேஇல்லை. தேவையானுல் பிள்ளையில்லாதவர்கள் அடுத்தவரின் பிள்ளைகளைத் தத்து எடுத்துக் கொள்வது போல் போதிய சொற்களில்லாத மொழியோ, அல்லது தேவையான சொற்களைப் படைத்துக்கொள்ள ஆற்றலற்ற மொழிகளோ பிறமொழிச் சொற்களைத் தம் மொழிக்கண் ஏற்றுக் கொள்வதில் பிழையில்லை; அதைத் தவிர அவற்றிற்கு வேறு வழியும் இல்லை. காலமெல்லாம் வறடியாய் — மலடியாய் இருப்பதைவிட அடுத்தவர் பிள்ளையையாகிலும் தாய் போல் பேணி வளர்ப்பது நல்லது. ஆனுல் பிள்ளை பெறமுடிந்தவளும், ஏற்கனவே பல பிள்ளைகளைப் பெற்றவளும் ஏன் பிற பிள்ளைகளைத் தத்து எடுத்துக் கொள்ளல் வேண்டும்?

மேலும், நம் தமிழ் மொழி பிற மொழிகள் சிலவற்றைப் போல் போதிய சொற்களில்லாத வறண்ட மொழியுமன்று; புதிய சொற்களைப் படைத்துக் கொள்ள வியலாத மலட்டு மொழியுமன்று. அன்றன்றும் உலகியல் முதிர்ச்சிக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் ஏற்ப புதிது புதிதாய்ச் சொற்களைப் படைத்துத் தரும் நிரம்பிய தாய்மைத் தன்மை வாய்ந்தது. மாந்தனுக்குள்ள மூளையாற்றல் எவ்வளவு ஆழமாகவும் அகற்சியாகவும் பாய்ந்து செல்ல வியலுமோ, அவ்வளவுக்கவ்வளவு தன்னையும் வளர்த்துக்கொள்ளும் திறனும் உரனும்

சான்றது. இஃதேன் பிறமொழிச் சொற்களைக் கடன் கொண்டு தன் செப்பத்தையும் நுட்பத்தையும் இழந்து போகல் வேண்டும்?

மேலும் இது வரை தமிழ் மொழியில் ஏற்பட்டுள்ள கலப்பு தானாகவே ஏற்பட்ட கலப்பும் அன்று. வேண்டுமென்றே ஓர் இனம் தன் இனத்தை உயர்த்திக் காட்டவேண்டும் என்ற நோக்கோடு தன் மொழியை, தன் மதத்தை, தன் பண்பாட்டை நம்மில் கொணர்ந்து கலக்கச் செய்த வலுக்கட்டாயக் கலப்பு ஆகும். இல்லெனில் மொழி—பாஷையாகியிருக்காது; முதுகுன்றம்—விருத்தாஜலம் ஆகியிருக்காது, பொங்கல்—சங்கராந்திப்பண்டிகையாகியிருக்காது; பள்ளிக்கூடம்—வித்தியாலயமாகியிருக்காது; திருமணம் விவாக சுப முகூர்த்தமாகியிருக்காது; நம் மூத்த மகன் ஜேஷ்ட குமாரனாகியிருக்கமாட்டான்; உலகத்திற்கே நாகரீகத்தைப் புகட்டிய நாமும் இன்று நாலாந்தர சூத்திர ஜாதியாகியிருக்க மாட்டோம்.

இனி, இறுதியாக நாம் அறிவியலறிஞர்க்கு இன்னொன்றையும் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். நாம் தன்மானமற்றவர்களாக, அறியாதவர்களாக, ஏமாற்றப்பட்டவர்களாக இருந்த வரை நம் மொழியையும், நம் இனத்தையும், நம் பண்பாட்டையும் குழப்பிக் கொள்ள இசைந்து விட்டோம். அதன் பயனாய் உலகில் மிகவும் கீழான நிலையில், இன்னும் முன்னேறாத நிலையில் நிலைகுன்றிப் போனோம். ஆனால் இக்கால் நம் தவறுகளை உணர்ந்து, தன்மான முற்று, விழிப்படைந்து வருகையில் ஏன் நாம் இன்னும் மொழிக் கலப்பை விரும்புதல் வேண்டும்? ஒருவன் நம்மை ஏமாற்றுவது; நாம் இன்னமும் ஏமாறிக் கொண்டு வருவதா? ஓர் இனத்தின் அடிப்படையான விழிப்புணர்ச்சிக்கு வித்தாக இருப்பதே மொழியுணர்ச்சி தான். தேவையில்லாமல் அவ்வுணர்ச்சியில் ஏன் நாம் அடிமைகளாகத் தன்மான மற்றவர்களாக இருத்தல் வேண்டும்? **இதுவரை கலந்திருப்பதை விட்டு விட்டு......** என்றால் எதுவரை? அவர் மடல் எழுதிய அன்றைய வரையிலா? அல்லது நான் இக்கட்டுரையை எழுதிய அன்றைய வரையிலா? அல்லது நீங்கள் இதைப் படிக்கும் இன்றைய வரையிலா? கலப்பு நிகழ்ச்சிக்கு எல்லையேது? அதை எல்லைப்படுத்துவது யார்? இனிமேல் கலப்புச் செய்ய வேண்டா எனக் கட்டளையிடுபவர் எவர்?

ஆகவே, **காலவகை** என்பதற்கு, தனித்தமிழ் வளர்ச்சியுறத் தொடங்கிய இக்காலம் – என்பதாகப் பொருள் செய்து கொண்டு, **பழையன கழிதலும்** என்பதற்குக் கடந்த மூவாயிரமாண்டுகளாகத் தமிழ்மொழியில் தொடர்ந்து செய்யப் பெற்ற மொழிக் கலப்பு நீங்கி வரும் நிலை எனப்பொருள் கண்டு, **புதியன புகுதல்** என்பதற்கு இனிப் புதியதாகத் தமிழில் மறுமலர்ச்சி ஏற்படும்படி செய்தல் என விளக்கஞ்செய்து, வழுவல என்பதற்கு, அம்மறுமலர்ச்சியை எவரும் தவறு என்றோ குற்றம் என்றோ சொல்லாமல் ஏற்றுக்கொண்டுதான் ஆகல் வேண்டுமென்பதாகப் பொருள் கூறி முடித்துக் கொள்க என்று எல்லாரையும் கேட்டுக்கொள்கிறேன். **—பெருஞ்சித்திரன்**

புதுவை மாணவரின் போராட்டம்!

புதுவை மாநிலம் தமிழகத்தின் ஒரு பகுதியாக விருந்தாலும் அதனை ஆண்ட பிரஞ்சுக்காரர்களின் நடுநிலையான போக்கால் அதன் தலைநகரமான புதுவை அழகுமிக்க சிறந்த ஒரு நகரமாகவும் பிரஞ்சு மொழியும் தமிழ் மொழியும் கலந்துறவாடும் பொருளியல் பண்பாட்டு விளைநிலமாகவும் உருவாகியது. பிரஞ்சு அரசினரின் பரந்த சமநில மனப்பாங்கினுல் புதுவைத் தமிழ்மக்களின் வாழ்க்கை மிகவும் மேம்பாடுற்று வந்த நிலையில், 1910-ஆம் ஆண்டில் வடநாட்டிலிருந்து வந்த அரவிந்தர் புதுவையின் செழிப்பான மண்ணில் தம் காலடிகளை ஊன்றினுர். அவர்தம் தேசியக் கொள்கைகளையும் மெய்யறிவுக் கோட்பாடுகளையும் நம்பித் தமக்குத் துணையாக நின்ற ஒருசிலருடனும், பிரஞ்சினின்றும் தன் கணவனைத் துறந்து இவர் நடவடிக்கைகளில் மனம் ஊன்றி நின்ற செல்வக் கொழிப்புற்ற ஒரு நங்கையின் துணையுடனும் 1920-இல் "அரவிந்தர் ஆசிரமம்" எனும் பெயர் கொண்ட ஒரு பாழியை உருவாக்கினுர். போதிய பொருள் வலியும், இந்தியத் தேசிய விடுதலை நோக்கங்கொண்ட பலரின் துணைவலியும் கொண்டு நின்றதால், அவ் அரவிந்தப் பாழி சிறிய ஓர் ஆட்சியமைப்பைப் போலவே தொடங்கிச் செயல்பட்டு உருவாகி வளர்ந்து, புதுவைமாநிலத்தின் பெரும்பகுதியினை வளைத்துத் தன்னுள் அடக்கி ஆட்கொண்டு, திமிர்ந்தெழுந்த ஓர் அனைத்ததிகார வல்லாட்சி போல் கொடி கட்டிப் பறக்க விட்டுக் கொண்டிருப்பதுடன் வெந்ததும் வேகாததுமான அதன் பழங்கோட்பாடுகளைப் பரப்பி வந்தது; வருகின்றது.

தனி மாந்த வழிபாட்டையே பரம்பொருள் வழிபாடாகக் கொள்ளுவித்துப் பாழியினைச் சேர்ந்த பழங்கொள்கைப் பித்தர்களை மெய்யறிவென்னும் பெயரால் தம்மை வணங்குவித்து வந்த அரவிந்தர் எனும் பாழித் தலைவர் 1950-இல் மாந்தர் எல்லாரையும் போலவே இறந்துபட்டபின், மிரா என்னும் அப் பிரஞ்சுப் பெண் மணியே அன்னை என்ற பெயரில் அரவிந்தர் பாழியினர்க்கு ஒரு வழிபடு தெய்வமாக மாறினுர். இன்றும் அப்பாழியினரின் மெய்யறிவுக் கோட்பாட்டில் தலையானவை, அவ் அரவிந்தரின் புதைமேடை (சமாதி) யினை இடைவிடாது வழிபடுவதும், ஒவ்வோர் இளங்காலையிலும் அன்னை எனும் அம்முதிய பெண்மணியின் முகப்பொலிவு காண்டலுமே யாகும். அகவை வரம்பின்றி ஆடவரும் பெண்டிரும் கலந்துறவாடிக் களிப்பதிலும், ஆடல் பாடல்களால் கூடிக் குலவுவதிலும் உண்டாட்டு, உரையாட்டு, நீராட்டு முதலிய இளமைக்கவர்ச்சிச் செயல்களிலும் மிகுந்த ஈடுபாடுற்ற அப்பாழியினர் உள்நாட்டு அரசியல் அதிகாரிகளையும் வெளிநாட்டுச் செல்வச் செழிப்பினரை

யும் எளிதே கவர்ந்து வருவதில் வியப்பில்லை. இவ்வகையில் தம் பொருள் வளத்தையும் தம் நிலப்பரப்பையும் குடியிருப்புகளையும் மிகுவாக வளர்த்துக் கொண்ட பாழியினர், தில்லித் தலைமையமைச்சர் உட்பட்ட நடுவணரசு அதிகாரிகளைத் தம் கையகப்படுத்திக் கொண்டு, விரகாண்மையுடன் புதுவையையே சுருட்டித் தம் கட்கத்துள் வைக்கப் பெரும்பாடுபட்டு வருகின்றனர். புதுவை நகரத்தையே அரவிந்த நகர் என்று மாற்றிட அப்பாழியினர் அரும்பாடுபட்டதையும், பின், அவ்வாசை அங்கிருந்த முன்னுளைய அரசியல் தலைவர்களின் தலையீட்டால் கை கூடாமற் போனதையும் புதுவை மக்கள் நன்கு அறிவர்.

இன்று புதுவையின் பெரும்பகுதிக்கட்டடங்கள் அவர்களுக்குச் சொந்தம். அங்குள்ள நிலங்களில் அப்பாழியின் ஆடவரும் பெண்டிரும் தம் களியாட்டக் கூடங்களை மளமளவென்று, அமைத்து வருகின்றர். புதுவைக்கு வந்து போகும் எவரும் இவ்வுண்மைகளை உணராமல் இருக்கமுடியாது. புதுவையில் எங்கு நோக்கினும் அரவிந்தப் பாழியினரின் முத்திரை குத்தப்பெற்றுக் கிடப்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். முந்தைய பிரஞ்சு அரசினரின் அருமையான ஆட்சி வளத்தால் மேம்பாடுற்ற விளங்கிய அங்குள்ள பெரும்பகுதி ஏழைத்தமிழர், அவர்கள் போனபின், தம் வாழ்க்கை வளங்கள் நலிதலுற்று, இன்று அரவிந்தரின் பாழியில் அடைக்கலம் புகுந்து, அங்குள்ள வட நாட்டினர்க்கும் பிற நாட்டினர்க்கும் எடுபிடிகளாகவும், என்பொடியப் பாடுபடும் தொழிலாளர்களாகவும், தம் வாழ்வை நடத்தி வருகின்றனர். இக்கால் அங்குள்ள தலைமைச் செயலர் (அஞ்சனி தயானந்து), ஆளுநர் (பி. தி. சத்தி), காவலர் தலைவர் (மித்ரா) முதலிய அனைத்ததிகாரிகளும் பாழியினர்க்குச் சார்பாகவே நடந்து கொள்வதுடன், அவர்களின் மறைமுக வல்லாண்மைக்கெல்லாம் தங்கள் அதிகார அமைப்புகளை அடகு வைக்கவும் துணிந்திருப்பதாகவே தெரிகிறது. இந்நிலையில் அங்குள்ள தி. மு. க. அரசும் அதன் முதல்வரும் கூட அப்பாழியினரின் உள்முகக் கவர்ச்சிகளில் மயங்கி, அவர்களுக்குப் பல்லாற்றானும் துணைபோகக் காத்துக் கிடப்பதுதான் வியப்பினும் வியப்பாகவே இருக்கின்றது. அவ்வகைத் திருவிளையாடல்களில் ஒன்றின் விளைவே, இக்கால் ஒருமுகமாய்த் திரண்டெழுந்துள்ள புதுவைக்கல்லூரி, பள்ளி மாணவர்களின் கோரிக்கையும், புரட்சிப் போராட்டமுமாகும்.

அடுத்த ஆண்டு ஆகஃச்டு 15–இல் அரவிந்தரின் நூற்றாண்டு விழா வரவிருக்கின்றது. அக்கால் புதுவையில் நடுவணரசுத்துணை

யுடனும் ஆளுகையுடனும் ஒரு **பல்கலைக் கழகத்தை** நிறுவ மாநில அரசு முயன்று கொண்டுள்ளது. ஏற்கனவே பல துறைகளிலும் காலூன்றிய அரவிந்தப் பாழியினர், இப் பல்கலைக் கழகத்திலும் தங்கள் ஆட்சி முத்திரையை எவ்வாறேனும் பொறித்துவிட விழைந்திருக்கவேண்டும். அவ்விழைவை குறிப்பாலுணர்ந்து கொண்டதுபோல் நடுவணரசினரும் அப்பல்கலைக்கழகத்திற்கு **அரவிந்தர் பல்கலைக்கழகம்** என்று பெயர் சூட்ட முடிவு செய்துள்ளனராம். ஏற்கனவே பொதுத் துறை பலவற்றிலும் தங்கள் வாழ்வுரிமையைப் பாழியினரிடம் பறிபோக்கிக் கொண்ட புதுவை மக்கள், கல்வித்துறையிலும் தங்களுக்குள்ள வாழ்வுரிமை வழக்கம்போல் பறிபோவதை அறிந்தும் வாளாவிருப்பதைக்கண்டு, தம் பொறுமையை இழந்தவராய்க் கல்லூரி மாணவர்களும், பிற பள்ளி மாணவர்களும் இணைந்து ஒரு போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். அதன்படி புதுவையில் தொடங்கவிருக்கும் பல்கலைக்கழகத்திற்கு **அரவிந்தர்** பெயரை வைக்கக்கூடாதென்றும், அது **திருவள்ளுவர் பல்கலைகழகம்** என்றோ **புதுவைப் பல்கலைக் கழகம்** என்றோதான் பெயர் தாங்கல் வேண்டும் என்றும் மாணவர்கள் கோரியுள்ளனர். இக் கோரிக்கைக்காகக் கடந்த 13—10—71 இலிருந்து தொடர்ந்து கல்லூரி நிறுத்தம் செய்து போராடி வருகின்றனர்.

இவர்களின் இந்தக் கோரிக்கை மிகவும் நேர்மையான கோரிக்கையே. அரவிந்தர் பாழியின் உள்முக நிகழ்ச்சிகளில் தம் உள்ளங்களைப் பறிகொடுத்து நிற்கும் தன்மான மற்றவர் ஒரு சிலர்க்கு வேண்டுமானால் இக்கோரிக்கை மண்டையடியாகப்படலாம். பிறர்க்கு இஃதொரு தன்மானக் காப்பு முயற்சியாகவே படும். இனி, எதிர்காலக் கல்வி நலன்கள் முற்றும் மாணவரைப் பொறுத்த செய்தியேயாகும். இதில் அரசினர் உள்ளிட்ட பிறர் யாவரும் நேர்மையாக நடந்துகொள்வர் என்று நம்புவதற்கில்லை. நம் ஆட்சித் தலைவர்கள் அத்துணைத் தன்மானம் உள்ளவரும் அல்லர்; நடுவணரசினர் போக்கும் பாழியினரைப் புறக்கணித்துப் புதுவை மக்களின் நலத்திலேயே கண்ணூன்றிவிடும் என்று எதிர்பார்ப்பதும் நம் பேதைமையே. எனவே தங்கள் தன்மானத்திற்கும் எதிர்கால வாழ்வு நலன்களுக்கும் கட்டியங்கூறி வீறுகொண்டு எழுந்து போராடும் மாணவர்களின் செயல் நமக்கு எவ்வகையிலும் வியப்பளிக்கவில்லை. அவர்களின் நேர்மையானதும், மிக எளிதாகத் தீர்த்து வைக்கப் பெற இயல்வதுமான இக்கோரிக்கையை அரசினர் அணுகும் முறைதான் நமக்கு வியப்பளிக்கிறது. அரவிந்தர் பெயர் வைக்கப் பெறுவதை

'**மாணவர்கள் விரும்பவில்லையானால் பல்கலைக் கழகமேவராது**' என்று ஆளுநர் கூறினாராம். அந்தப் பெயரில் ஆளுநர்க்கென்ன அவ்வளவு கவர்ச்சி என்பது நமக்குப் புரியவில்லை. '**இந்திரா காந்தியும் அரவிந்தரைத்தாம் விரும்புகிறாராம்**' -இப்படிச் சொல்லியிருக்கின்றார் அமைச்சர் ஒருவர். அஃது இந்திரா காந்தியின் தனிப்பட்ட செய்தி. அவருக்கிருக்கும் விருப்பத்திற்காக மக்களுக்கு வேண்டிய ஒரு பல்கலை கழகத்தை அரவிந்தரின் புதைமேடை(சமாதி)யில் கொண்டு போய் வைக்கும் ஒரு படையல் பொருளாகக் கருதி விடக் கூடாது என்பதே நம் போன்றவர்களின் விருப்பமும் வேண்டுகோளும் ஆகும்.

"**புதுவை என்றாலே அரவிந்தர் பாழிதான்**" என்று உலகினர் எல்லாரும் நினைத்தல் வேண்டும் என்பதில் பாழியினர் மிகவும் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருப்பதைத் தாங்கள் நன்றாகப்புரிந்து கொண்ட பின்னும், மாணவர்கள் போராடி நிற்கும் இவ் விக்கட்டான நிலையில் அவர்கட்குத் துணைபோகாத புதுவை மக்களை எண்ணி நாம் வெட்கப்பட வேண்டியுள்ளது. ஏற்கனவே நடுவணரசுச் சார்பில் உள்ள புதுவைப் பள்ளிகள் சிலவற்றில் சமற்கிருதமும், இந்தியும், ஆங்கிலமுமே பயிற்றுவிக்கப் பெற்றுவருகின்றன. இப்பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பெற்றாலும் அந்த நிலைதான் பெரும்பாலும்தொடர்ந்து நிற்கும். அத்துடன் பாழியினரின் சார்பில் ஏற்கனவே உள்ள The International Education Centre என்னும் **உலகக் கல்விக் கழகமும்** இப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்று, இந்த இணைகால் வழி பாழியினரின் வல்லாண்மை முறையே இங்கும் பாய்ந்தோட வழி வகுக்கலாம்.

எவர் விளைவித்தாலும் அறுத்தாலும் தமக்குரிய அரசியல் பங்குகள் குறைவு படாமலிருக்கின்றவா என்னும் தன்னல நோக்கிலேயே எந்தக்கட்சித் தலைவர்களும் குறியாய் இருப்பர் என்பதற்குப் புதுவையில் உள்ள தலைவர்களும் விலக்கல்லர். எனவேதான் புதுவையில் உள்ள கட்சித்தலைவர்கள் சிலரும் **அரவிந்தர்** பெயரில் அத்துணை நப்பாசை கொண்டுள்ளனர். **திருவள்ளுவர்** பெயரில் **பாழியினரைப் போலும்** கவர்ச்சி யிருக்க வழியில்லைதான். ஆனால் **புதுவை** அல்லது **பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகம்** என்பதிலுமா கவர்ச்சியில்லை? இது பற்றி மாணவர்களின் மெய்யான கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இவர்களுக்குத் தடையாயிருப்பது எது என்பது நமக்கு விளங்கவில்லை.

இறுதியாக நாம் வேண்டுவதெல்லாம், மாணவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள அரசினரும் அங்குள்ள கட்சித் தலைவர்களும் தக்க வழி வகைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதும், அங்குள்ள அரவிந்தப் பாழியினர் மேலும் மேலும் தம் சூழ்ச்சி வலைகளைப் புதுவைமண்ணில் பரப்பாதிருக்க அங்குள்ள பொதுமக்கள் தக்க கண்காணிப்புடன் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதுமே யாகும்.

—பெருஞ்சித்திரன்

நூறுசிரியம்

பெருஞ்சித்திரன்

(துரை-மாணிக்கம்)

பாட்டு ௩௰

ஆயுங் காலை நாண்மிக வுடைத்தே
ஈனுக் கன்றைக் காட்டுநர் கொள்ளும்
ஆமடிச் சிறுபயன் போல
நாமவற் கிளமை நலமழிப் பதுவே!

பொழிப்பு: ஆய்ந்து பார்க்குமிடத்து மிகுந்த நாணமாக விருக்கின்றது; தான் ஈனுத ஒரு செய்கன்றைக் காட்டி ஆவின் மடியினின்று கொள்ளுகின்ற சிறிய அளவினதாகிய பாலைப்போல, நம்மை மணந்து கொள்ளாத அவனுக்கு நம் இளமை நலத்தைத் தந்து நம்மை அழித்துக் கொள்வது.

விரிப்பு: இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

மணந்து கொள்வதாகக் கூறித் தன் தலைவியிடத்துக் களவுப் புணர்ச்சி மேற்கொண்டொழுகும் தலைவன் காதுகளிற் படுமாறு தோழி தலைவிக்குக் கூறியதாகும் இப்பாட்டு.

'தலைவன் தான் மணந்து கொள்கின்றேன்' என்று கூறிய கூற்று உண்மையானதன்று. புனைவு சான்றது. அன்றுயின் அதனை அவன் மெய்ப்பிக்க முயலுவான். அவ்வாறின்றி இரவுக் குறியிடத்து அவன் நாளும் வந்து களவின் புணர்ந்து செல்வதும், நாம் அவன் சொல்லை நம்பி அவன் பொருட்டு நம் இளமையை அழித்துக் கொள்வதும் நமக்கு மிகுந்தநாணத்தை விளைவிப்பதாகும். எனவே நீ எச்சரிக்கையாக விரு' - என்று தலைவிக்குத் தோழி அறிவுறுத்தினுள் என்க. இதனைத் தலைவனின் காது படும்படி அவள் கூறியது, அவன் அது பற்றி எண்ணி மணந்து கொள்ளும் காலத்தை நீட்டிக்க விடான் என்று கருதி என்க.

ஆயுங்காலை என்றதால் நாம் இதுவரை ஆராயாமல் நடந்து கொண்டோம். இனி அவ்வாறு இருத்தலாகாது என்றுள் என்க.

நாம் மட்டுமன்றி அவனும் இது பற்றி ஆராய்ந்து பாராது நடந்து வருகின்ருன். இனி அவனும் ஆய்ந்து பார்த்து மணத்திற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் என்றும் குறிப்புணர்த்துவாள்.

நாண்மிக வுடைத்து என்றுழி, நாம் இவ்வாறு செய்யும் செயல் மிகுந்த நாணத்தைத் தரத்தக்கது. பிறர்க்கு இது தெரியவரின் மிகவும் இழிவாகும் என்ருள். யாங்கள் மட்டுமேயன்றி நீயும் எம்மை ஏமாற்றி எம் இளமையை அழிப்பது நாணற்குரியதே என்றும் அஃது ஓர் ஆண்மகன் செய்தக்கது அல்லதென்றும் குறிப்புணர்த்தினுள் என்க.

ஈனுக்கன்று: ஈனப்பெருத கன்று. செய்கன்று. ஈன்றகன்று இறந்தவிடத்து, வைக்கோல் முதலிய செய்பொருள்களைக் கொண்டு கன்றுபோல் செய்வித்து அதனைக் காட்டி ஆமடி கறப்பர். மெய்க் கன்றையன்றிப் பொய்க் கன்றைக் காட்டிக் கறத்தல் ஆவை ஏமாற்றிக் கறத்தல் ஆகும்.

காட்டுநர் கொள்ளும் ஆமடிச் சிறு பயன் : ஈனுக்கன்றைக் காட்டிக் கறப்பவர் கொள்ளுகின்ற ஆமடியின் சிறிய அளவினதாகிய பால்.

மெய்க்கன்றை யூட்டிக் கறக்கும் பாலினது அளவினும் பொய்க் கன்றைக் காட்டிக்கறக்கும் பாலினது அளவு குறைவுபடும் ஆகையால் அதனைச் சிறுபயன் என்ருள். இனிச் சிறுமை பொருந்திய பயனுமாம் என்க.

தலைவன் 'வரைந்து கொள்வேன்' என்று கூறும் கூற்றினைத் தோழி ஈனுக்கன்றுக்கு உவமித்தாள் என்க. நம் 'நம்பிக்கை' யாகிய மெய்க்கன்று இறந்தவிடத்து பொய்க்கன்று ஆகிய 'வரைந்து கொள்வேன்' எனும் பொருளில்லாச் சொற்களைக் கூறி நம்மை மேலும் மேலும் ஏமாற்றி வருகின்ருன் தலைவன்; எனவே விழிப்பாயிரு" எனத் தலைவிக்குத் தோழி எச்சரிக்கை செய்தாள். அவ்வாறே 'இனி நீயும் எங்களைப் பொய் கூறி ஏமாற்றி வருவதை நாங்களும் உணர்ந்து கொண்டோம். இனி மணமுடித்துக் கொண்டாலல்லது களவுப் புணர்ச்சியை நினையாதே' என்று தலைவனுக்கு விடுத்த எச்சரிக்கையாகவும் கொள்க.

இனி, காட்டுநர் கொள்ளும் என்றதால், யாமே தராது நீயே வலிந்து கொண்டனை என்றும் தலைவற்குக் குறிப்புணர்த்தினுள் என்க.

ஆமடி என்று உறுப்பைப் புலப்படுத்திக் கூறியதால் உள்ளத் துணர்வின் வழிப்பெருத உறுப்புப்புணர்ச்சிக்கு நீவிர் இருவீரும் அடிமையாகல் வேண்டா என இருவர்க்கும் அறிவு கொளுத்தினுள் என்க.

களவுக் காலத்துப் பிறர் வருகைக்கு அஞ்சியஞ்சி விரைந்து கொள்ளும் புணர்ச்சியின்பம், உள வேட்கையைத் தீர அவிக்காது உடல் வேட்கையை மட்டும் சிறிதே அவிக்கும் தன்மைத்து ஆதலின் சிறுபயன் என்ருள்.

இனி, மணந்து கொள்ளப் பெருது மெய்யின்பம் பெறும் அவர் செய்கை சிறுமைத்தாகலின் சிறுப்யன் என்ருள்.

'புறத்தை மறந்து துய்க்க வாய்ப்பின்றி, உரிமையற்ற கொல்லையுட் புகுந்து பறித்தல் போல், அகத்தைப் புறத்து வைத்து வெருவச் சுவைத்தலின் இன்பம் என்னுது பயன் என்ருள் என்க.

தலைவன் முல்லை நிலத்தவனுகலின் அவற்குப் பொருந்திய ஓர் உவமையால் உணர்வித்தாள் என்க.

நாம் அவற்கு, நாம், நம்மை ஏமாற்றும் அத்தலைவனுக்கு.

தலைவியே தலைவனெடு புணர்ந்தால் என்னினும், தோழி தன்மைப் பன்மையிற் பேசுவது, அவளுக்கு வந்த இழிவு தனக்கும் ஆகும் என்பதால் என்க.

இளமை நலம்: இளமையாகிய பெண்மை நலத்தை.

அழிப்பது: அழித்துக் கொள்வது.

உரிமையில் புணர்ச்சி உளத்தைத் தாக்கி உடல் நலத்தையும் கெடுக்குமாகலின் நலம் அழிப்பது என்று கூறினுள் என்க.

உறவும் ஒக்கலும் ஊரும் அறியாது தம்மைக் களவின் ஈடு படுத்திப் புணர்தல் மேற்கொண்டொழுகும் தலைவனும் தலைவியும் தம் நிலையைத் தாமே நன்கு உணர்தல் பொருட்டுத் தோழி அவர்க்கு அறிவுறுத்தியதாகும் இப்பாடல்.

இது குறிஞ்சி யென் திணையும், இரவுக்குறி வந்து தலைமகன் சிறைப்புறத்தானுக தோழி தலைவிக்குச் சொல்லிய தென் துறையுமாம்.



மக்களவை

ம: 122- புதுவைப் பல்கலைக் கழகம்...!

புதுவையில் நான்கு கல்லூரிகள் உ ள. இவற்றில் உள்ள மாணுக்கர் ஏறத்தாழ 4000 பெயர்களே. புதுவையின் வளநிலைகளை ஆய்ந்து கண்ட நடுவணரசின் பல்கலைக்கழக நல்கைக் குழு (University Grant Commission) புதுவையில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவக் கூடிய அளவுக்கு வளமும் ஆட்பெருக்கமும் தேவையும் சிறிதும் இல்லை என்று தெளிவாகக் கூறியது. இந்நிலையில் 15-8-1972 அன்று வரவிருக்கும் அரவிந்தர் நூற்ருண்டு விழாவினை ஒட்டி, எல்லா வகையிலும் புதுவையில் ஒரு பல்கலைக்கழகம் போலவே இயங்கி வரும் உலகக்கல்விக்கழகம் (The International Education Centre) உண்மையிலேயே ஒரு பல்கலைக்கழகமாக மாறிஞல் மிகுந்த பயனும் ஊதியமும் அடைந்திட இயலும் என்னும் ஆசையினுல் அரவிந்தர் பெயரில் ஒரு பல்கலைக்கழகம் தங்கள் ஆளுகை (Administration) யின் கீழ் அமைத்துக் கொள்ளத் திட்டப் தீட்டினர், அரவிந்தர் பாழியினர். புதுவை அரவிந்தர் பாழியின் செயல்முறைகள் யாவும் தமிழர்க்கும் புதுவைவாழ்நர்க்கும் மிகவும் மாருனவை. அவைபற்றி விளக்கமாகப்பிறகு எழுதுவோம், 'அரவிந்தர் பாழி புதுவையில் இருப்பதால்தான் புதுவைக்கு வந்தேன்' என்று 'ஆனந்த விகடனி'ல் வெளிப்படையாகவே செய்திதந்த புதுவைத் துணைநிலை ஆளுனர் (B. D. Jatti) பாழியார் தொடர்பில் புதுவை மக்களின் நலனை நெகிழவிடும் புதுவை முதலமைச்சர் (M. O. H. Farrook), பாழியின் புகழ் பாடிடும் தலைமைக்காவல் அதிகாரி (Mithra) கணவன் பாழியின் ஆரவில் தலைமை அலுவலராகப் பணிசெய்யும் நிலையில் புதுவையையே ஆட்டிப் படைக்கின்ற தலைமைச் செயலர் (Anjini Dayanand) போன்றவர்கள் துணையால் அரவிந்தர் பெயரில் ஒரு பல்கலைக்கழகம் புதுவையில் ஏற்படுத்த எல்லாஏற்பாடுகளும் நடந்து வருகின்றன. ஆளுமை பாழியினரிடம் இருக்காது என்றும் நடுவணரசிடந்தான் இருக்குமென்றும் முதலமைச்சர் கூறுகிருர். நடுவணரசு என்பதும் பாழி என்பதும் வேறன்று; ஒன்றே. ஆதலால் எல்லாத்

தமிழரும் முனைந்து கூடிப் புதுவை மக்களின் ஆளுமையின் கீழ் ஒரு பல்கலைக்கழகம் அமைந்திடவும் அதற்குத் திருவள்ளுவர் பெயரையோ, புதுவை மாநிலத்தின் பெயரையோ வைக்கவும் போராடிடும் எமக்குத் துணை செய்வார்களாக.

புதுவை, தாகூர் கலைக் கல்லூரி மாணவர்கள் சார்பாக,
ப. பக்தவத்சலன், மாணவர் தலைவர்.

ம: 123. தமிழ்மரபுரையின் நிறைவு!

அருந்தமிழ்க் காவல, வணக்கம்! யான் நீண்ட நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 'திருக்குறள் தமிழ் மரபுரை' படித்தேன். மட்டில்லா மகிழ்ச்சியுற்றேன்- இத்துணை அளவு தமிழ் அறிவும் அடிப்படைக் கல்வியால் அமையப் பட்டதன்று. தொடக்கக் கல்வி கூட முற்றுப் பெருத நிலையில் தன்முனைப்பால் தேடிப் பெற்றதே இவ்வறிவும். அதுவும் தென்மொழியைப் படித்த பிறகு அவ்வுணர்வு மேலும் பன்மடங்கு பெருகக்கண்டேன் எனின் மிகையன்று. மற்றும் பாவாணர் அவர்களின் உரைத்திறம் மற்ற உரைகட்கு மிகுந்த வேறுபாடுடையது கண்டேன். இன்னும் முற்றும் படித்தின்புறவில்லையெனினும், ஆங்காங்கே சிற்சிலகுறள்களை த்தங்களின் (தென்மொழியில் வெளிபிடப்பெற்ற) ஆய்வுரையை வைத்து ஒப்பு நோக்கும்போழ்து கற்கண்டாக இனிக்கக்கண்டேன். இத்தகு தனித்தமிழ்நூற்களைப் படிக்கின்றபோழ்து நெஞ்சத்திற்குத்தான் எத்துணை இன்பம்! அவ்வின்பத்திலே எத்துணை நிறைவு! ஆகா இதுவன்றோ உண்மையான நிறைவு. இந்நிறைவன்றோ ஞாலத்தின் உயர்வு. இவையெல்லாம் இந்த நரிமாக்களுக்கு எப்படித் தெரியும்? அரிமாவும் வரிமாவும் இருக்குமிடம் தெரியாமல் பதுங்கிப் போனபின்பு நரிமா வாலாட்டாமல் என்செய்யும்? அவ்வாலை நறுக்கிஅதன்கொட்டமடக்க வாளெடுத்த நல்நெஞ்சே! வாழிய நீடுழி! இவ்வையம் உள்ளளவும் வாழ்க! இந்த இரண்டும்கெட்டான் தமிழன் உயர்வுக்காக வேனும் வாழ்க! இது போன்று பாவாணர் அவர்கட்கும் எனது தாழ்மையான பணிவும் வணக்கமும் உரித்தாகுக. அவருக்கு இறையருள் நீண்ட வாழ்நாளைத் அளித்திடுக. கல்லூர் மெய்யழகன், கோவை-2.

ம: 124. தமிழ்ப் புலவர்களுக்கு மதுரைப் பல்கலைக்கழகம் பட்டமளிப்பு விழாவில் இடமில்லையாம்.

சென்ற ஆண்டு தமிழ்ப்புலவர்களுக்கு எல்லாரும் பட்டம் பெறுகிற நன்னாளில் பட்டம் வழங்கப் பெறவில்லை. தனி நாளில் ஆட்சி (செனட்) அவைக்கூட்டத்தில் வைத்துச்சிறப்பு எதுவுமின்றி பட்டம் வழங்கப்பெற்றது. ஏறத்தாழ 40 பேர் பட்டம் பெறச் சென்றிருந்தோம். அவர்களுள் நானும் ஒருவன். தமிழாசிரியர்களை தாழ்வுபடுத்திப் பட்டம் வழங்கும் இம்முறையைக் கண்டித்து என்-

னுடைய தலைமையில் அத்தனைப் புலவர்களும் 'வெட்கம் வெட்கம்' எனக்கூறி வெளிநடப்புச் செய்தனர்.

இவ்வாண்டு, தமிழ்நாடு தேசிய ஆசிரியர் பேரவைத் தலைவரும் பல்கலைக்கழக ஆட்சி அவை உறுப்பினருமான திரு. கோ. வேலன், எம். ஏ., அவர்கள் 'முறையான பட்டமளிப்பு விழாவில் தமிழ்ப்புலவர்களும் சேர்த்துக் கொள்ளப் பெறவேண்டும். அவர்களுக்கென்று தனி நாளில் பட்டம் வழங்கும் முறை உடனே கைவிடப்பட வேண்டும்' என்றும் முடிவினை வலியுறுத்திப் பேசியிருக்கின்றார்கள். உறுப்பினர்கள் இக் கருத்தினை வெட்டியும் ஒட்டியும் பேசியிருக்கின்றனர். இறுதியில் ஒப்போலைக்கு விடப்பட்டிருக்கின்றது. கருத்துத் தேர்வில் தமிழ்ப் புலவர்களுக்கு இடமில்லை என்னும் கருத்துடையவரே வென்றிருக்கின்றனர். எங்குப் போய்க் கூறுவது இக் கொடுமையை? நடப்பது தமிழாட்சி! ஆண்டு கொண்டிருப்பது தமிழக அரசு! மாண்டு விட்டதோ தமிழுணர்ச்சி?

சென்ற ஆண்டு தெ. பொ. மீ. துணை வேந்தராக இருந்த பொழுது நடந்த கொடுமை மு. வ. துணைவேந்தராக இருக்கின்ற பொழுதும் நடந்திருக்கின்றது. தலைகுனிய வேண்டாவா இதற்காக? வெட்கப்பட வேண்டாவா நாம்? தமிழகத் தமிழாசிரியர் கழகம் மதுரை மாவட்டக் கிளைக்குச் சென்ற ஆண்டுமடல் வாயிலாக எழுதித் தெரிவித்து விரைந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தியிருக்கின்றேன்.

ஆனாலும் தமிழாசிரியர் பெயரால் இருக்கும் கழகங்கள் எல்லாம் வாய் மூடிக் கிடக்கின்றன. எவருக்கும் பூமாலை போடுவதிலும் பாமாலை தொடுப்பதிலுமே விரைவு காட்டுகின்ற அக்கழகங்கள் நெறியற்ற இந்நிலை கண்டு கொதித்தெழுவதில்லை. தாங்கள் இதனைக் கண்டித்து ஆசிரியவுரை ஒன்று எழுத வேண்டுகின்றேன். இதனையும் தங்கள் இதழில் வெளியிட வேண்டுகின்றேன். நக்கீரனைப் பெருமையாகப்பேசும் புலவர்கள் நக்கீரனைப் பின்பற்றி வாழ வேண்டாவா? உரையாற்றுவது ஊருக்குத்தானா? நமக்கில்லையா? தென்றலிலே குளிர்ச்சி இருக்கின்றது! தோப்பிலே நிழல் இருக்கின்றது! ஆனால் தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ் தானில்லை! தமிழ்ப்பட்டத்தை மதித்துச் சிறப்புச் செய்வார் தமிழகத்தில் இலர்! மு. வ. துணைவேந்தராக இருந்தென்ன பயன்? தமிழ்ப் புலவர்களுக்குப் பட்டமளிப்பு விழாவில் இடம் பிடிக்கும் வரை தமிழ்நாடு தேசிய ஆசிரியர் பேரவை ஓயாது! உறங்காது! என்று கூறிக்கொள்கின்றேன்! தமிழ்ப்புலவர்களே விழித்து எழுவீர்! நமது உரிமைகளுக்குப் போராட முன் வருவீர்! வணக்கம்.

தங்கள் பால் பெருமதிப்புள்ள, த. முல்லைவழுதி.

செயலாளர், தமிழ்நாடு தேசிய ஆசிரியர் பேரவை, மதுரை-9.

'தென்மொழி'க்கு நன்கொடை.

6-2-70 முதல் 23-2-70 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும், அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக. உருபா

திரு. பா. ம. அறவாழி, சென்னை. 1-00

திருவாளர்கள்: மகிழரசன், அ மணிவண்ணன்,
ஆசியோர் வழி சென்னை அன்பர்கள்:

திரு. அ. மணிவண்ணன், சென்னை-12. 5-00

திரு. அன்பழகன், சென்னை-4. 2-00

திரு. மு. தனசேகரன், சென்னை-12. 2-00

திருவாளர்கள்: அன்பர் ஒருவர், பி. இராமன், பாலகிருட்டிணன்
சா. பர்ணுடுதாசன், இரா. சுப்பிரமணியன், எ: கிருட்டிணன்,
மு. பத்மனுபன், சிங்கார சடையப்பன், ஆ, சு. கன்னையன்,
கிருட்டிணன், சு. சுகுமாரன், கு. சந்திரசேகரன்,
இரா. சாரங்கன், வேங்கட இரமணி, கோ. கணேசன்,
இராமச்சந்திரன், (தலைக்கு உருபா ஒன்றுமேனி) 16-00

மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி 3-00

அ. பா. தமிழ்வென்றி, பெங்களூ-8. 3-00

திரு. எசு. சையத்து அசிமுதீன் அவர்கள் வழி
கோலார் தங்க வயல் அன்பர்கள்.

திருவாளர்கள்:- வி. நாச்சியப்பன், எசு. பாலாமணி, பி. வி.
அமலநாதன், எசு. சையத்து அசிமுதீன், ஆர். எம்.
வைரவன், எசு. சின்னச்சாமி (உருபா 5 மேனி) 30-00

திரு. பி. சந்திரசேகரன். 3-00

திருவாளர்கள்: எசு. நரசிம்மன், வி. கோவிந்தராசன்,
எசு. ஆர். கிருட்டிணமூர்த்தி, எல். நாராயணன் (உருபா2மேனி)8-00

திருவாளர்கள்: எசு. சி. கந்தசாமி, என். இலட்சுமிபதி,
வி. ஆர். வாசுதேவன், ஏ. கே. கன்னியப்பன், டி.
சுப்பிரமணி, ஆர். கிருட்டிணன், எசு. செயராமன்,
பி. நடராசன், கே. சீனுவாசன் உருபா 1 மேனி); 9-00

திரு. பொ. இளங்கோ, உக்கரம் கோவை. (மா. வ) 25-00

திரு. முகவை. இமயவரம்பன், திருக்கொட்டிக்காடு 1-00

(தொடரும்)

அவரவர் சுமை அவரவர்க்கே!

—த. அன்பழகன்.—

எலார்க்கும் மிகையே இறைவன் சுமையே
வலார்க்கும் அலார்க்கும் வகுத்தனவ் வகையே

ஒருவர்க் குழைக்கும் உரங்கொண் டவரை
இருவர்க் குழையென ஏவி விடுகிறுன்;
இருவர்க் குழைக்கும் திறம்பெற் றவரை
மூவர்க் குழையென முடுக்கி விடுகிறுன்;
மூவர்க் குழைக்கும் முனைப்புள் ளோரை
நால்வர்க் குழைக்க நலிவிக் கின்றுன்!

குடும்பம் சுமப்பவர்க்(கு) ஊர்ச்சுமை தந்தும்
ஊர்சுமப் போர்க்கே உலகுதாங் கென்றும்,

கறையாற்குக் கோழியையும்
கோழிக்கு வெருகினையும்
வெருகிற்கு நாயினையும்
நாயனைய விலங்குகட்கு
மாந்தரையும் பகையாக்கி

அனைவர்தம் ஆற்றலை அடக்கியும் —நமக்கே
இமையா இறைவன் சுமைகூட் டியதால்,

'யாம்படு துன்பம் யாரும்பட் டில'ரென
யாமும் நீவிரும் இவரும் அவரும்
யாவரும் பிதற்றும் இழிவுகொண் டோமே.

பாவாணர் செ. சொ. பி. அகரமுதலித்திட்டம்.

செ. சொ. பி. அகரமுதலித்திட்டத்தின் பெயர்ப்பட்டியல் இடமின்மையால் இவ்விதழில் வெளியிடப் பெறவில்லை. அடுத்த இதழில் வெளிவரும்.

—அமைச்சர்

சேணொலி வான் செலவு.

(SUPERSONIC FLIGHT-)

—அழ. அழகர்சாமி-வான்படை.

இற்றை ஞான்று போக்குவரத்து வானூர்திகள் மணிக்கு 600-கற்கள் வேகத்திற்குக் குறையாமல் பறக்கின்றன. வானூர்திகள் இம்மிகை வேகத்தில் பறக்க ஆற்றல் மிக்க பீற்றுவளி சூழ்ச்சியங்கள் வேண்டப்படுகின்றன. ஊர்திகள் நனி உறுதி வாய்க்கக் பெற்றவை யாயும் இருத்தல் வேண்டும். மேலும் அவற்றின் "பாய்வளிக் கோட்டுரு" வளியை எளிதாய்த் துளைத்துச் செல்லுமாறு அமைதலும் வேண்டும். அவ்வமைப்பிலும் வானூர்தியின் முகப்பும் இறக்கையின் முன்விளிப்பும் வளியின் எதிர் விசையால் தடையுறுவது தவிர்க்க முடியாததாகும். வானூர்தியின் உந்து வேகம் மிகும்பொழுது ஊர்தியின் முகப்பில் தோன்றுகின்ற வளிவிசை, அலையடுக்குத் தடையாக மாறுகிறது. இதை ஆற்றில் செல்லும் படகின் வேகம் மிகும்பொழுது படகின் முகப்பில் தோன்றுகின்ற அலைகளின் பெருக் கத்தையும், அதனால் ஏற்படும் தடையின் வளர்ச்சியையும் ஒப்பு நோக்க விளக்கமாகும்.

இதனால், படகின் முகப்பில் நீர் அலைகள் தோன்றுவதைப் போன்றே பறக்கும் வானூர்தியின் முகப்பிலும் வளியலைகள் தோன்று கின்றன என்பது போதருகின்றது. வளியலைகள் ஒலியின் வேகத்தில் (மணிக்கு 740-கற்கள்) செல்லும் ஆற்றல் மிக்கவை. வானூர்தி ஒலியின் வேகத்தைக் கடக்கும் பொழுது, வளியின் எதிர்விசை யாற்றல் அதிர்வலையாக மாறித் தடையரணாக உருவெடுக்கிறது. வானூர்தி இத்தடையரணை இடித்து ஊடுருவிச் செல்லும்பொழுது கடும் இடியோசை உண்டாகிறது.

இதிலிருந்து, வளியலைகள் ஒலியலையின் வேகத்தை அடையும் வரை வானூர்தி பறத்தற்கு ஏந்தாக வழிவகுத்துக் கொடுக்கின்ற தென்பதும், ஒலியின் வேகத்தை அடையும்பொழுது வளியலை ஒலி யலையுடன் ஒன்றி, அதிர்வலையாகி வானூர்திக்கு ஒலித்தடையரணா கின்றதென்பதும் தேற்றம். இதனாற்றான் ஒலியின் வேகம் ஒலித்தடை யரண் என்று குறிக்கப்படுகிறது. இவ்வொலித்தடையரணைக் கடந்து செல்லும் செலவே சேணொலி வான் செலவு ஆகும்.

போர் வானூர்திகள் குறை நேரத்திற்கு ஒலியின் இருமடங்கு வேகத்தைக் கடக்கும் ஆற்றல் வாய்ந்தவை. அவற்றின் முகப்பு, வளியைக் கிழித்துச் செல்வதற்கு ஏந்தாகக் கூர்மையாயும், இறக்கைகள் சிறுத்தும் சப்பையாயும் புடை வீச்சோடும் இருக்கும். இவ்வகை மிகை வேக வானூர்திகளால் குறைவேகத்தில் (மணிக்கு 100-கற்கள் வேகத்திற்குக் கீழ்) பறத்தல் இயலாது. பறந்தால் ஊர்தி வானில் மிதத்தற்கான தூக்கு விசை கிட்டாது கீழே விழுந்துவிடும். இம்மிகை வேக வானூர்திகள் தரையினின்றும் வானில் கிளம்ப ஓட்டவழியில் 10-கற்கள் இகந்தோடல் வேண்டும்.

இதைத் தவிர்க்க சூழ்ச்சியப் பொறி வல்லுநர் ஊர்தியில் சுருங்கு இறக்கைகளைப் பொருத்திப் பறக்க முயன்றனர். சுருங்கு இறக்கை வானூர்தி குறை வேகத்தில் பறக்கும் பொழுது, சுருங்கி-யுள்ள இறக்கைகளை வெளியே பரப்பும். இறக்கைகளின் பரப்பளவு மிகுதியாகும்பொழுது ஊர்தியின் தூக்குவிசை மிகுதியாகும். ஊர்தியின் வேகம் மிகும்பொழுது இறக்கைகள் உள்ளே சுருக்கிக் கொள்ளும். (இது பறவைகள் இறக்கைகளைச் சுருக்கி விரிப்பதை யொக்கும்) ஆனால், சுருங்கு இறக்கைகள் ஒலியின் வேகத்தை நெருங்கும்பொழுது உண்டாகும் அதிர்வு அலைகளின் தாக்குதலைத் தாங்கும் ஆற்றலற்று விடுகின்றன. இதனால் இம்முயற்சி கைவிடப் பட்டது.

மற்றொரு முறைமை கண்டுபிடிக்கப்பட்டது. இதில் இறக்கைகள் மூட்டு வாய்களால் பிணைக்கப்பட்டுள்ளன. ஊர்தி ஒலியின் வேகத்தை நெருங்கும்பொழுது இவ்விறக்கைகள் பின்னோக்கி வீசப் படுகின்றன. அவ்வப்பொழுது இறக்கைகளின் புடைவீச்சுக் கோணம் மிகுதியாகிறது. இறக்கைகளின் புடை வீச்சுக் கோணம் மிகும் பொழுது வளி எதிர்விசைத் தடை குறைகிறது. இம்முயற்சி ஓரளவு வெற்றி கண்டுள்ளது. இவ்வகை வானூர்திக்கு வீச்சு இறக்கை வானூர்தி என்று பெயர்.

இதைத்தவிர வேறொரு வேடிக்கையான முறையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஏவுகணை போன்ற உருவமைப்புக் கொண்ட ஒரு வானூர்தியில் இரு சுழல் சூழ்ச்சியங்கள் பொருத்தப்படுகின்றன.

சூழ்ச்சியங்களைச் செங்குத்தாகச்சுழற்றி முடுக்கிவிட்டால், ஊர்தி சில மணித்துளிகளில் வானின் உயர் மட்டத்தை அடைந்துவிடும். அடைந்தபின், சூழ்ச்சியத்தைக் கிடையாகச் சுற்றினால் ஊர்தி முன்னோக்கிப் பறக்கும். இவ்வகை ஊர்தியில் சூழ்ச்சியம் செங்குத்தாகவும் கிடையாகவும் சுழற்றப்படுவதால், இதற்குச் சுழல் சூழ்ச்சிய வானூர்தி என்று பெயர். இவ்வூர்தியில் இறக்கைகள் கிடையா. ஆதலின் வளி எதிர்விசைத்தடை தவிர்க்கப்படுகிறது. இதனால் ஊர்தியின் வேகம் பன்மடங்கு மிகுதியாகிறது.

சேணொலி வான் செலவு எப்பொழுதும் வானின் உயர் மட்டத்திலேயே பயிலப்படுகிறது. உயரம் மிகும்பொழுது வளியழுத்தம் குறைகிறது. வளியழுத்தம் குறைய, வளி எதிர்விசைத் தடையும் குறைகிறது. இதனால் ஊர்தி ஒலியின் வேகத்தை எளிதாகக் கடக்க முடிகிறது. மேலும் வானின் உயர் மட்டத்தில் வெப்பம் மிகவும் குறைவாகலின், ஊர்தி மிகை வேகத்தில் பறக்கும் பொழுது ஏற்படுகின்ற காற்றுராய்வு வெப்பம் மிகவும் குறைவு. கடல் மட்டத்தில் ஒலியின் வேகம் மணிக்கு 760 கற்கள் (கடல் மட்டத்தில் காற்றின் அழுத்தம் 15 கன அடி. வெப்பம் 15 பாகை நூற்றுப் படிநிலை) மீவளி மண்டிலத்தின் தொடக்கத்தில் ஒலியின் வேகம் தோராயமாக மணிக்கு 650-கற்கள். (காற்றே இல்லாத வெற்றிடம், வெப்பம் 60 பாகை கீழ் நூற்றுப்படிநிலை) காற்றின் அழுத்தம் வேறுபடும் பொழுது ஒலியின் வேகமும் வேறுபடுகிறது. வெப்பநிலை மாறும் பொழுது காற்றின் அழுத்தமும் மாறும்.

குறிப்பிட்ட உயரத்தில் வானூர்தி ஒலியின் வேகத்தை அடைந்தால், அதன் ஒலித்தடையரண் ஒன்றாகும். தன் ஒலியின் வேகத்தைப் போல் வானூர்தியின் வேகம் இருமடங்கானால் ஒலித்தடையரண் இரண்டாகும். இது வானூர்தியின் வேகத்திற்கும் ஒலியின் வேகத்திற்கும் உள்ள தகவைக்குறிக்கிறது.

அஃதாவது:

$$\frac{\text{வானூர்தியின் வேகம்}}{\text{ஒலியின் வேகம்}} = \text{ஒலித்தடையரண் எண்.}$$

கடல் மட்டத்தில்,

ஒலித்தடையரண் 1—மணிக்கு 760-கற்கள்
ஒலித்தடையரண் 2—மணிக்கு 1500-கற்கள்
ஒலித்தடையரண் 3—மணிக்கு 2100-கற்கள்

எந்த வானூர்தியாலும் மணிக்கு 2000-கற்கள் வேகத்தை மிஞ்சிப் பறத்தல் இயலாது. நீரின் உறைநிலைக்குக் கீழ் 60 பாகை நூற்றுப்படிநிலை தட்பமுள்ள மீவளி மண்டிலத்தில்கூட ஒரு வானூர்தி ஒலித்தடையரண் 2-ஐக் கடந்தால், 3½-மணித்துளிக்குள் காற்றுராய்வால் ஏற்படுகின்ற வெப்பம் நீரின் கொதிநிலையை அடைகிறது. வானூர்தி ஒலித்தடையரண் 2½-இல் பறந்தால், உராய்வு வெப்பம் 400 பாகை நூற்றுப்படிநிலையாக உயர்ந்து விடுகிறது. இது வானூர்தியில் பயன்படுத்தப்படுகின்ற மாழைகளுக்கு ஊறு விளைவிப்பதாகும். இதற்கு வெப்பத் தடையரண் என்று பெயர்.

கலைச் சொற்பட்டியல்:—

பீற்றுவளி சூழ்ச்சியம்-Jet Engine
ஒலித்தடையரண்-Sonic Barrier (or) Sound Barrier
சுழல் சூழ்ச்சியம்-Swival Engine
வெப்பத்தடையரண்-Heat Barrier
பாய்வளிக் கோட்டு உரு-Streamline Shape
ஓட்டவழி-Runway முகப்பு-Nose
செங்குத்துநிலை-Vertical Position
முன்விளிம்பு-Leading Edge
கிடைநிலை-Horizontal Position
புடைவீச்சுக் கோணம்-Sweep Angle
நூற்றுப்படிநிலை-Centigrade
சுருங்கு இறக்கை-Retractable wing
தகவு-Ratio
வீச்சு இறக்கை-Swing Wing
மீவளி மண்டிலம்-Stratosphere
அதிர்வு அலை-Shock wave

சீவக சிந்தாமணி - ஒரு பெரும் பாவியம்

மு. வை. அரவிந்தன், கீ. க. மு.

'எள்ளிலிருந்து எண்ணெ எடுப்பதுபோல இலக்கியத்திலிருந்து இலக்கணம் எடுக்கப்படுகின்றது'-என்பது நம் முன்னோர் கருத்து. "அறிஞர்கள் வகுக்கும் ஆராய்ச்சி முடிபுகள் சிறந்த கலைகளுக்குப் பயன்படுவதில்லை. சிறந்த கலைகள் எல்லாம் தமக்குரிய இலக்கணத்தைத் தாமே படைத்துக் கொள்கின்றன"-என்பது ஆங்கில இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் கருத்தாகும். சீவக சிந்தாமணியும் தான் தோன்றும்போதே தன் இலக்கணத்தையும் படைத்துக் கொண்டது என்று கூறுவது பொருந்தும். தொல்காப்பியருக்கு முன் தமிழ் மொழியில் பாவியங்கள் இருந்தமைக்கு தொல்காப்பியச் செய்யுளில் சான்று உண்டு. தொல்காப்பியர் கூறும் அம்மை, அழகு முதலியவை பாவியம் பற்றிய இலக்கணம் என்பது அறிஞர்கள் கருத்து. இன்று கிடைக்கும் பாவியங்களுள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பிற்காலப் பாவியங்களிலிருந்து வேறுபட்ட அமைப்புடையவை. பிற்காலப் பாவியங்கள் கடவுளை வணங்கி, அவையடக்கம் கூறி, நாட்டு வளம், நகர்வளம் பாடிப் பாவியத்தலைவன் பிறப்பைக் கூறிக் கதையைத் தொடங்குகின்றன. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இந்த அமைப்பு இல்லை. இவ் விரு பாவியங்களுக்கும் அவையே இலக்கணமாக அமைகின்றன.

சீவக சிந்தாமணி அவ்விரு பாவியங்களையும் பின்பற்றுமல் தன் இல்க்கணத்தைக் தானே தோற்றுவித்துக் கொண்டது. இப் பாவியம் தோன்றியதன் பின் தோன்றிய தண்டியலங்காரம் கூறும் பாவிய இலக்கணம், பல பாவியங்களின் அமைப்பைக் கண்டு கூறியதேயாகும். அவ்வாறு அந்நூல் இலக்கணம் கூறச் சிந்தாமணியும் துணை செய்திருக்கக் கூடும். இலம்பகம் என்ற பிரிவு சிந்தாமணியில் மட்டுமே காணப்படுவது இதற்குச் சான்ருக அமையும். இருப்பினும் இலக்கணம் கற்று அதனோடு இலக்கியத்தை ஒப்பிடுவதே முன்னோர் கண்ட மரபு. நாமும் தண்டியலங்காரம் கூறும் பாவிய இலக்கணம் அனைத்தும் சிந்தாமணியில் உள்ளன என்று காண வேண்டும்,

தண்டியலங்காரம் பாவியத்தின் இலக்கணத்தைப் பின்வருமாறு கூறுகின்றது.

1 பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றில் ஒன்று
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று,
2 நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகி,
3 தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்,
4 மலைகடல் நாடு வளநகர் பருவம்
5 இருசுடர்த் தோற்றம் இனையன புனைந்து,
6 நன்மனம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தற் கலவியிற் களித்தல் என்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி,
6 மந்திரம் தூது செலவுஇகல் வென்றி
சந்தியின் தொடர்ந்து, 7 சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி,
8 நெருங்கிய சுவையின் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றியது என்ப.

மேலே கூறப்பட்ட இலக்கணங்கள் (எட்டும்) சீவக சிந்தாமணியில் உண்டு. அவற்றை விரிவாக அடுத்து வரும் பகுதிகளில் காண்போம்.

பாவிய அமைப்பு:- ஆபர்குரோம்பி என்ற அறிஞர், பாவியம் பற்றி ஆராய்ந்த பல முடிபுகளை வெளியிட்டுள்ளார்; நாடகத்தையும் பாவியத்தையும் ஒப்பிட்டு அவற்றின் அமைப்புகளை ஆராய்ந்துள்ளார். அவர் கூறும் இலக்கணம் சீவக சிந்தாமணிக்குப் பொருந்தி வருகின்றது. சிந்தாமணிப் பாவியத்தில் இடம் பெறும் கதை நிகழ்ச்சிகள் ஒன்றிற்கு ஒன்று தொடர்பு உள்ளவையாய் இருக்கின்றன. ஒரு நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சிக்குத் தானே இடம் தந்து கதையை வளர்த்துச் செல்லுகின்றது. பாவியத்தில் இடம் பெற்றுள்ள எந்தச் சிறு நிகழ்ச்சியும் கதையுடன் ஒட்டாமல் பயனற்று இருக்கவில்லை. பாவிய மாந்தரின் இன்ப துன்பங்கள் அறிவு ஆற்றல்கள், உயர்வு தாழ்வுகள் ஆகியவற்றைப் படிப்படி

யாக வளர்த்துத், தெளிவாகக் காட்டுகின்றது. இஃது இவ்வாறு நிகழ்ந்தது சரியேஎன்று கற்போர் அமைதியுறும்படி முடிவுகள் அமைந்துள்ளன. ஒரே நிகழ்ச்சியைத் திரும்பத் திரும்பக் கூறுமல் குறிப்பாக உணர்த்தும் கலைச் செட்டு அமைந்திருக்கின்றது. இன்றி யமையாத இடங்களில் இறைமை நிகழ்ச்சிகள் அளவோடு அமைந் துள்ளன. இவற்றை விரிவாகக் காண்போம்.

நிகழ்ச்சிக் கோவை: சீவக சிந்தாமணியில் உள்ள ஒவ்வொரு இலம்பகத்திலும் ஒவ்வொரு சிறுகதை உள்ளது. கற்போர் நெஞ்சத்தைக் கவரும் சச்சந்தன் கதை (நாமகள் இலம்பகம்), சீவகன் தன் ஆண்மையைப் புலப்படுத்தி நிரைமீட்டுப் பரிசாகப் பெற்ற கோவிந்தையைத் தன் நண்பனுக்குத் தருகின்ற கதை (கோவிந்தை யார் இலம்பகம்), யாழிசைத் திறங்காட்டிக் காந்தருவ தத்தையைச் சீவகன் மணக்கும் கதை (காந்தருவதத்தையார் இலம்பகம்) முதலிய கதைகள் இலம்பகத்திற்கு ஒன்ருக அமைந்துள்ளன. இவ்வாறு தனித்தனியாக அமைந்து கிடக்கும் கதைகளைத் தேவர் திறம்படக் கோத்துள்ளார். ஒரு கதை முடிந்து மற்ருெரு கதை இயல்பாகத் தொடங்குகின்றது; கதைகள் பொருந்துமிடங்கள் (மூட்டுவாய்) நன்கு அமைந்துள்ளன.

சச்சந்தன் இறந்தவுடன் சீவகன் பிறந்து, வேருெரு கதையைத் தொடங்குகின்ருன். மறைவாக வளர்ந்துவரும் சீவகன் ஆனிரையை மீட்க வெளிப்படுவதால் கோவிந்தையாருக்குத் திருமணம் நிகழ் கின்றது. "காந்தருவதத்தையை இசையில் வெல்பவர் ஒருவரும் இல்லையா!" என்று எல்லாரும் கவலை கொள்ளும் நேரத்தில் சீவகன் தோன்றி அவளை வென்று மணந்து கொள்ளுகின்ருன். இவ்வாறே பாவியத்தில் உள்ள கதைகள் யாவும் சீவகனுல் தொடர்பு கொண்டு ஒரு நூலில் கோக்கப்பட்ட பல மணிகள் போலப் பொருத்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

ஒரு நிகழ்ச்சி மற்ருென்றிற்கு இடம் தரல்: சிந்தாமணிக் கதை களில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியும் மற்ருெரு நிகழ்ச் சிக்கு இடந் தந்து கதையை நடத்திச் செல்லுகின்றது. அரண்மனையிலிருந்து பறந்து செல்லும் மயிற்பொறி அரசியைக் காத்து, சீவகன் பிறப்பிற்குக் காரணமாகின்றது. சீவகன் சுடுகாட்டில்

பிறப்பது அவனைக் கந்துக்கடனிடம் சேர்க்கின்றது. நிரைமீட்சி சீவகனின் நண்பனுக்குத் திருமணம் முடித்து, சீவகனின் துணை வலிமையைப் பெருக்குகின்றது. யாழ்வென்றி சீவகனுக்குத்திருமணம் முடிக்கின்றது. சுண்ணத் தேர்வு குணமாலையையும் சுரமஞ்சரியை யும் அறிமுகப்படுத்திப் பின் மணமுடிக்கின்றது. இவ்வாறே பாவி யம் முழுதும் ஒரு நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சிக்கு இடம் தரக் கதை தொடர்கின்றது.

அச்சாணி போன்றவை:- பாவியத்தில் உள்ள சிறிய நிகழ்ச்சி களும் எளிய காட்சிகளும் அச்சாணி போன்று கதைக்கு உதவு கின்றன. இது வேண்டாத நிகழ்ச்சி என்றோ, இது பயன்படாத காட்சி என்றோ, எதையும் விலக்க முடியாதவாறு பொருந்தியுள் ளன. விசயை தன் குழந்தையின் கையில் இடும் கணையாழி சீவகனைக் கந்துக்கடனுக்கு அறிமுகப்படுத்திக் காக்கின்றது. குழந்தை தும்மும்போது தெய்வம் வாழ்த்தும் ''சீவ" – என்னும் சொல்லே பாவியத் தலைவனுக்குப் பெயராகின்றது. சீவகனால் அன்பு செய்யப் படும் நாயும், வெறி கொண்டு திரியும் பட்டத்து யானையும், சோலையில் பலாப்பழம் உண்டு கூடியும் ஊடியும் மகிழும் குரங்கு களும் கதையில் சிறந்த திருப்பங்களுக்குத் துணைசெய்து, பல நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகின்றன.

படிப்படியாக வளர்த்துச் செல்லுதல்: சீவகனுடைய ஆற்றலைத் தேவர் படிப்படியாக வளர்த்து நிறைவு செய்து கட்டியங்காரனை அழிக்கின்றார். சுடுகாட்டில் துணையின்றிப் பிறந்த நிலையிலிருந்து சீவகன் தன் அறிவு, ஆற்றல், ஒழுக்கம் ஆகியவற்றில் உயர்ந்து போகின்றான். செல்லுமிடமெங்கும் சுற்றமும் நட்பும் பெறுகின்றான்; ஊரும் உறவும் தேடுகின்றான். அவனது வளர்ச்சி தேவரால் திறம்படக் காட்டப்படுகின்றது. அவ்வாறே கட்டியங்காரனின் அழிவும் மெல்ல மெல்ல நிகழ்கின்றது. வேடர் கவர்ந்த ஆனிரையை மீட்க இயலாமல் உற்ற தோல்வி, காந்தருவதத்தையின் திருமண முடிவில் சீவகனோடு இட்ட போரில் தோல்வி, பட்டத்து யானையை அடக்கிய சீவகனைப் பிடிக்க முயன்றதில் தோல்வி, திரிபன்றி எய்வதில் உற்ற தோல்வி என்று பல தோல்விகளை அடுக்கிக் காட்டி முடிவில் நடக்கும் போரில் அவனது அழிவைக்காட்டுகின்றார்.

இலக்கியத் தீர்ப்பு: நல்லவர் வாழ்ந்து மகிழ்வதையும், தீயவர் வீழ்ந்து அழிவதையும் இலக்கியம் திறம்படக்காட்டி அறத்தை நிலை நிறுத்த வேண்டும். மேலும் இவ்வாறு நிகழ்வது சரியே என்ற நினைப்பு உண்டாகும்படி நிகழ்ச்சிகள் அமைதல் வேண்டும்.

'கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது'

வாழ்ந்த மன்னன் சச்சந்தன் முடிவும், விசயையின் துறவும் நமக்குப் பொருத்தமாகவே படுகின்றன; சீவகன் ஓராண்டு மறைந்து வாழ்வதால் தான் பல நன்மைகள் அவனுக்கு அடுக்கடுக்காய் வந்து சேர்கின்றன. மன்னனைக் கொன்று, அரசைக் கொண்ட அமைச்சன் கட்டியங்காரன் அரசுக்குரிய இளவரசனுல் கொல்லப்பட்டு அழியும்போது 'இந்த முடிவு தகும், தகும்' என்ற எண்ணமே மேலோங்கி நிற்கின்றது. தந்தை (சச்சந்தன்) இழந்த அரசு மைந்தன் (சீவகன்) கைக்கு வந்து அவன் முடிசூடும் போது நம் மனம் களிப்படைகின்றது. சுண்ணப் பொடி காரணமாய்க் குண மாலையுடன் முரண்பட்டு, 'ஆடவரைக் காணேன்' – என்று கன்னி மாடத்தில் வாழும் சுரமஞ்சரி சீவகனை மணக்கத் தெய்வத்தை வேண்டி நிற்கும்போது நம் உள்ளம் இஃது இப்படித்தான் முடிய வேண்டும்" என்று அமைதி யடைகின்றது.

கலைச்செட்டு: முன்பு சொல்லாத நிகழ்ச்சிகளைப் பின்னர்க் கூறுதல், ஒரு செயல் முடிந்தபின் அச் செயல் நிகழ்ச்சிக்குரிய காரணம் கூறுதல், ஒரு நிகழ்ச்சியைக் கொண்டே மற்ருென்றை விளக்குதல் முதலிய நுட்பங்கள் தேவரிடம் அமைந்துள்ளன.

சீவகனுக்குக் கல்வி கற்பித்த அச்சணந்தி என்னும் ஆசிரியரின் யானைத்தீ நோய், சீவகனைக் கண்டபோதே நீங்கியதாக முதலில் அமைக்காமல், பின்னரே அந்நிகழ்ச்சியைத் தேவர் கூறுகின்ருர். சீதத்தன் என்னும் வணிகனின் கப்பல் மூழ்கியதுபோல் காட்டியது விஞ்சையனின் செயல் என்பதை முதலில் கூருமல் பின்னரே கூறுகின்ருர் தேவர். சீவகன் அரசைக் கைப்பற்றியபின் தான் இளமையில் விளையாடிய ஆலமரத்திற்குச் சிறப்புச் செய்வதாய்க் கூறப்பட்டுள்ளது. ஆனல் சீவகனின் இளமைப் பருவத்தைப் பாடும் தேவர் அவன் எந்த ஆலமரத்தின் கீழும் விளையாடியதாய்க் குறிப்பிடவில்லை. இவ்வாறு செட்டுக் கருதி அமைக்கும் தேவரின் ஆற்றல் வியந்து போற்றற்குரியது.

இறைமை நிகழ்ச்சிகள்: எல்லா நாட்டுப் பாவியங்களிலும் இறைமை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. அவை அளவோடு இடம் பெறுவது சிறப்பு. பாவலர்கள் தாம் நடத்திச் செல்லும் கதைகளில் அவிழ்க்க முடியாத சிக்கல், தடை எதிர்பாராத திருப்பம் ஆகியவை ஏற்படும்போது, அவற்றை நிறைவு செய்ய இறைமை நிகழ்ச்சிகளைச் சேர்க்கின்றனர். இன்றியமையாதபோது அத்தகைய நிகழ்ச்சிகள் இடம் பெறுவது குறையாகாது.

சிந்தாமணியில் இறைமை நிகழ்ச்சிகள் அளவாக இடம் பெற்று உள்ளன. அவை கதையில் ஏற்படும் தடைகளை நீக்குகின்றன; சிக்கலை அவிழ்க்கின்றன. சுடுகாட்டில் மகவைப் பெற்றுத் தனியே புலம்பும் விசயைக்கு அங்குள்ள தெய்வம் ஒன்று தோழி வடிவில் வந்து உதவுகின்றது. அத் தெய்வம் செய்யும் உதவிகள் பல. இதனால் பாவியத்திற்கு அது தேவையாகின்றது. சீதத்தன் என்னும் வாணிகனைத் தன் நகர்க்கு அழைக்க, கலுழவேகன் என்னும் விஞ்சையன் தரன் என்பவனை ஏவிச் செய்யும் மாயச் செயல்கள் காந்தருவதத்தையை மண்ணுலகிற்கு அனுப்பத் துணை செய்கின்றன. (முற்பிறப்பில் நாயாக இருந்த) சுதஞ்சணன் என்னும் தேவன் சீவகனை மீட்க, காற்றுமழையை ஏவுகின்றான். அதனால் சீவகன் தப்பிச் செல்கிறான். தன் மந்திர வலிமையால் தேவரை அழைப்பது காந்தருவதத்தையின் ஆற்றலைப் புலப்படுத்துகின்றது. சீவகனுக்கும் கட்டியங்காரனுக்கும் போர் தொடங்குமுன் வானில் ஓர் இயக்கன் தோன்றிச் சீவகன் வெல்வான் என்று கூறி மறைகின்றான். இதனால் சீவகனின் ஆற்றல்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை மிகுகின்றது. இவ்வாறு தேவர், தம் பாவியத்தில் தேவியல் நிகழ்ச்சிகளைத் திறம்பட அமைத்துச் சிறப்புச் செய்துள்ளார். (தொடரும்)

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	6-00	4-00
தனியிதழ் ,,	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

எறும்பி

மெய்ம்மைப்பித்தன்.—

முட்டையினின்று வெளிவந்த குஞ்சுகளைப் பார்த்துத் தாய் எறும்பி பேசினாள்;

"மாந்தர்கள் எனப்படுபவர்களைப்பற்றி உங்களுக்குச்சொல்கின்றேன்;
கேளுங்கள், பிள்ளைகளே!

அவர்கள் மலை போலும் உருவமுடைய பூதங்கள்!
அவர்கள் விடும் மூச்சு புயல் வீசுவது போல் வீசும்.
அம்மூச்சு வரும் வாயில்களோ அஃதாவது மூச்சுத் துளைகளோ,
ஒவ்வொன்றும்,
நாம் நூறுபேர் ஒரேயடியாக நுழைந்து போகும்படி யிருக்கும் !
அவற்றுள் காடுபோன்ற மயிர்க்கூட்டம் உண்டு!
காதுகளும் அப்படியே!
வாயோ நம் புற்றைப்போல் அகன்றதாகவும் ஆழமாகவும் இருக்கும்!
அவர்களுடைய கண்கள் எனப்படும் பளிங்குக் குளங்களில் நாம்,
தப்பித் தவறி விழுந்தால் போதும்!
பின்பு மீளவே முடியாது!
அக் குளங்களுக்கு இரண்டு கதவுகள் இருக்கின்றன!
அவை உடனே வந்து மூடிக்கொள்ளும்!
அல்லது அவர்கள் கைகள் எனப்படும் இரண்டு நீட்ட மொட்டை
மரங்கள் அக்கண்களை ஒரு கசக்குக் கசக்கி விடும்!
அதன் பின் நாம் உடல் வேறு உறுப்பு வேறாகப்
பிய்த்தெறியப்பட்டு விடுவோம்!

அந்த மொட்டை மரக் கைகள் அவர்களுக்குப் பலவகையில்
துணையாக இருக்கும்!
அவற்றின் நுனி அகன்று பாறைபோல் இருக்கும்!
அதற்கு உள்ளங்கை என்று பெயர் சொல்லுகிறார்கள்!
அதன் மேல் நம் மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள்
கூடிப் பேசலாம்!
ஒவ்வொரு பாறை போன்ற உள்ளங்கையினின்றும் ஐந்தைந்து
தூண்கள் முளைத்திருக்கின்றன!
அத்தூண்களில் ஒன்று நம் நூற்றுவரை

ஒரே நசுக்கில் கொன்று விட முடியும்!
அவற்றின் நுனிகளில் அகலமான கத்திகள் செருகப்பட்டுள்ளன!

இப்படியே அவர்களுக்குக் கீழ்ப்புறத்தில்
வேறு இரண்டு உறுதியான தடித்த மரங்கள் உண்டு!
அவற்றையே அவர்கள் 'கால்கள்' என்று சொல்லுகின்றார்கள்!
அவையிரண்டும் அவர்களை எங்கும் எடுத்துச் செல்கின்றன!
நாம் நீண்ட நேரம் நடந்து போகும் தொலைவை
அவர்கள் ஒரே எட்டில் தாண்டிவிடுவார்கள்!
நாம் வாழும் புற்றை அந்த மரங்கள் ஒன்றினால்
ஒரே தடவை மோதிச்
சிதைத்துவிட முடியும்!
'கால்கள்' எனப்படும் அந்த மரங்கள் முழுவதும் மயிர்கள்
காடு போல் முளைத்துக் கிடக்கும்!
அதன் அடிப்பாகம் நன்றாய் அகன்றும் நீண்டும் உள்ள
பாறைகள் போல் இருக்கும்!
அவற்றிலும் ஐந்தைந்து கிளைகள் உண்டு; அவற்றின் நுனிகளிலும்
கத்திகள் செருகப்பட்டிருக்கும்!
அப்பாறைகளின் அடியில் நாம் மாட்டிக் கொண்டால் அவ்வளவே!
அவற்றால் சில நேரங்களில் நம் இனங்களைத் தேய்த்து அழிப்பார்கள்
அக்கால் நம் இன மக்கள் கோடிக்கணக்காகத்
தேய்க்கப்பட்டுச் சிதைக்கப்பட்டுப் போவார்கள்!

பிள்ளைகளே! இன்னும் கேளுங்கள்; சொல்லுகின்றேன்!

அவர்களுக்கு வயிறு என்னும் ஒரு பகுதி உண்டு!
மலை மலையாக அவர்கள் உண்ணும் சோற்றுக் குவியல்கள்
வந்து தங்கும் அகண்டாகாரமான மலைப்புழைகள், அவை!
நம் போல் கோடானு கோடிப் பேர்
அங்குப் போய்த் தங்கினாலும்,
நாம் அத்தனைப் பேரும், சிறிது நேரத்தில்,
நீரால் உறிஞ்சப்பட்டுப் போய் விடுவோம்!
நான், முன் சொன்ன புற்றுகளைப் போலும் அகன்ற
வாய்களின் வழியாகத் தான்,
அவர்கள் மலை மலையாக உணவுப் பொருளை உருட்டிப்போட்டு
விழுங்குகின்றார்கள்!

அவர்களின் சோற்று உருண்டை ஒன்று,
நம்மில் ஆயிரம் பேருக்கு நெடுங்காலத்திற்கு உணவாக வரும்!
அவ் வுருண்டை போல் குறைந்தது
முப்பது நாற்பது உருண்டைகளை,
ஒரு பகலில் மூன்று முறை விழுங்குகின்றார்கள்!

அவர்கள் உணவுக்கு இடையிடையேயோ,
உணவுண்ட பின்னரோ,
அண்டா அண்டாவாகத் தண்ணீர் குடிக்கின்றார்கள்!
ஓர் அண்டாத் தண்ணீரில் நம் போன்றவர்கள்
கோடிக்கணக்கான பேர்களை மூழ்கடிக்கலாம்!
இதைக் கேளுங்கள் குழந்தைகளே!
அவர்கள் உடலிலிருந்து அடிக்கடி வெளியேறும்
கழிவு நீரில் நம் புற்றே முழுகிப் போனாலும் போகும்!
அவர்கள் வெளிப்படுத்தும் உணவுக் கழிவோ,
ஒவ்வொரு முறையும் ஒரு குன்று போல் குவிந்துவிடும்!
என் அருமைக் குழந்தைகளே!
அவர்கள் உண்ணும் உணவைப்பற்றிச் சொல்லுகிறேன் கேளுங்கள்!
மிகச் சுவையான பண்ணியங்களையும்,
கார இனிப்புப் பொருள்களையும்,
'அரிசி' என்னும் ஒருவகை உணவுப் பொருளை அவித்த
குவியல்களையும், அவர்கள் உண்ணுகிறார்கள்!
அந்த அரிசி ஒவ்வொன்றும் ஓர் உருளை போல் இருக்கும்!
நம்மில் பத்துப் பேர் சேர்ந்தால் எவ்வளவு இருப்போமோ,
அவ்வளவு பெரியதாக இருக்கும், அந்த அரிசி உருளை!
ஆனால் நம்மில் இருவர் அதை இழுக்க முடியும்!
முயன்றால் நான் ஒருத்தியே கூட அதை இழுக்கலாம்!
அதைப்போல் கோடிக்கணக்கானவற்றை
பெரிய பெரிய கிணறு போன்ற தாழிகளில் போட்டு
அவித்து உண்பார்கள்!

உங்களுக்கு நான் இன்னொன்றைச் சொல்ல
மறந்து விட்டேன்!
அவர்கள் வாழும் பகுதிகளில்
ஏராளமான விலங்குகள் உண்டு!

ஒவ்வொன்றும் பெரிய பெரிய மலைகள் போல் இருக்கும்!
அந்தப் பூதங்களையே எடுத்து விழுங்கும் படியான
விலங்குகளும் அங்கே உண்டு!
ஆனால் அவற்றைக் கூட, தங்கள் அறிவுக்
கூர்மையால் அடக்கி ஆளுகின்றார்கள், அவர்கள்!

அவர்கள் குடியிருப்புகளைப் பற்றி
உங்களுக்குச் சொன்னாலும் புரியாது!
பெரிய பெரிய மலைகளைப் போல், நாற்புறமும்
சுவர்களை எழுப்பிக் கொண்டு, அவர்கள் வாழுகிறார்கள்!
எத்தனை வகையான மந்திர தந்திரங்களைக் கற்றவர்கள் அவர்கள்;
தெரியுமா?
சூரியனைப் போல் ஒளியை அவர்களால் உடனே உண்டாக்கிக்
கொள்ள முடியும்!
அரிய பெரிய வேலைகளை அவர்களால் செய்ய முடியும்!
அவர்கள் அறிவிலும் வலுவிலும் மிகமிகச்சிறந்து விளங்குகின்றார்கள்!
அவர்களை வெல்லவே முடியாது!''

—இவ்வாறு தாய் எறும்பி சொல்வதைக் கேட்ட ஒரு பிள்ளை எறும்பு,
அஞ்சி, நடுக்கத்துடன்,
''அப்படியானால் அவர்களுக்கிடையில் நாம்
வாழவே முடியாதா?''—என்றது.

''ஏன் முடியாது; எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும்
அவர்கள் நம் எதிரிகள்!
எவ்வளவு சிறியவர்களாக விருந்தாலும்,
நாம் அவர்களைக் கண்டு அஞ்சிப் பின்வாங்கிவிடக் கூடாது!
அவர்கள் நம்மைச் சாகடிப்பதானாலும் கூட, முடிந்தால், நாம்
அவர்களை நம் வலுக் கொண்ட மட்டும் கடித்துவிட்டுத்தான்
சாகவேண்டும்;''-என்று
வீறுரை முழங்கினாள் அத்தாய் எறும்பி! o

நினைவில் வையுங்கள்

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடு.
இன்றே உறுப்பினராகுங்கள்.

பூஞ்சோலை

ஆசிரியர்: காரை—இறையடியான், காரை—அழகன்
ஆண்டுக் கட்டணம் 3 உருபா. தனிஇதழ் விலை 25 காசு.
பூஞ்சோலை, காரைக்கால்-1.

பாவேந்தர்—இரட்டைமணி மாலை

1 செந்தமிழ் வீறு; செழிக்கும் புரட்சிச் சிறப்பகத்தோன்;
நந்தமிழ் நாடி நலமுற நாடு நறுங்குணத்தோன்;
வந்தவர் மாயை வழுவினை நீக்கும் வலிவுடையோன்;
பைந்தமிழ்ப் பேருன "பாரதி தாசனு"ம் பாவலனே!

2 பாவலர்கள் பாராட்டும் பாவேந்தன்; பைந்தமிழின்
காவலாய்க் காட்சி தந்த கண்ணியத்தான்—மாவளஞ்சால்
பாவியங்கள் பண்ணிப் படர்தீமை பாறியவன்;
கூவிடுங் கொள்கைக் குயில்,

3 "குயிலி"தழ் ஆசான்; குறள்நெறி பேசிடுங் கூர்மதியன்
அயர்வுறச் செய்திட்ட ஆரிய மாயை அடர்த்தியினுல்
துயிலுறும் மக்கள் துடிச்செழச் செய்த தொடர்பணியன்
உயிர்த்தமிழ்ப் பற்றும் உணர்வினைத் தந்த ஒளிமகனே!

4 ஒளிகாட்டும் ஓர்மை உயர்படைப்பாம் பாவால்
தெளிவூட்டுஞ் சீர்மைத் திருவன்;—நெளிவுற்ற
பைந்தமிழ்ப் பாதையைப் பண்படுத்தும் பாவேந்தன்
மைந்துடைமை யெல்லாம் மறம்.

5 மறத்தமிழ் மாண்பினுல் மாசோட்டும் மல்லார்ந்த மாமதியன்
திறத்தமிழ் எங்குந் திகழ்வுற நாடு திருமனத்தான்;
இறப்புறு பண்பாட்டின் இன்னலஞ் சொன்ன இடிக்குரலோன்;
சிறப்புறு பாவேந்தன் செம்பணி யெல்லாஞ் செழுந்தமிழ்க்கே;

6 செழுந்தமிழ்ச் செப்பத்தான்; சீர்திருத்தச் செம்மல்;
எழும்புரட்சி ஏற்றத்தான்; ஏறு;—விழுப்பத்தின்
வீருய் விளங்கு விரிந்தமதிப் பாவேந்தன்
ஆருய் விளங்கும் அறிவு.

7 அறிவொளி நல்ல 'அழகின் சிரிப்பை' அளித்த மகன்;
'குறிஞ்சித்திட்' டோடு 'குடும்ப விளக்கு'ம் கொடுத்தமகன்;
வெறியேற்றும் பாடல் விளைத்துத் தமிழ்மண் விடுதலைக்கே
குறிக்கோள் விரிவைக் கொடுத்த புதுவைக் குருமகனே!

8 குருவானுன் பாவலர்க்கே; கொங்குத் தமிழ்க்கோள்
திருவானுன் தென்னர்க்குத் தேர்ந்தே;—எருவானுன்
தண்டமிழ் தாஞேங்கித் தன்னுட்சி கண்டிலங்க
மண்டுபுக ழானுன் மதி.

8 மதிவினை தூண்டும் மதிப்பாய் மனத்தின் மடமறுப்பாய்
முதிரத் தமிழ்க்கு முறைமை உரைத்தநன் மொய்ம்பரசன்;
குதித்திடும் மூடக் கொடுஞ்செய லெல்லாம் குறித்திகழ்ந்தோன்;
வதியும் உணர்வு வலியான் தமிழை வளர்த்தவனே!

10 வளர்நலத் தொண்டன்; வளத்தமிழ் வாகை
உளத்தன்; உணர்வொளி ஓர்வன்—கிளர்ச்சியால்
கீழ்மை யகற்றும் கிளத்துமொழிப் பாவேந்தன்
வாழ்வுரிமைக் கீந்தான் வழி.

11 வழித்தெளி வூட்டி வழுவெலாம் நீங்க வனப்புரைத்தோன்;
அழிவெலாங் காட்டி அறியாமையோட்டிடும்ஆர்ப்புடையோன்;
விழிநிகர் நாட்டின் விழல்நிலை போக்க விரைவளித்தோன்;
மழுப்பல் மயக்கம் மடமெலாம் மாய்க்கும் வழியவனே!

12 வழிகாட்டி வண்டமிழர் வாழ்வை வளஞ்செய்
விழிப்பூட்டும் வன்றமிழ்ப்பா வேந்தன்—அழிவோட்டும்
ஆற்றல் தனித்தமிழை ஆங்கிறுதி கொண்டீந்த
போற்றும்பாப் பொக்கசமோ பொன்.

13 பொன்னிகர் பாவில் புரட்சிப் புதுமைப் பொலிவளித்தோன்
முன்னணிப் பாவிய மொய்ம்பாம் 'எதிர்பாரா முத்த"மெனும்
இன்னூர் இலக்கியம் ஈந்திற வாத இசையுடையோன்;
கன்னல் கனிவெல் கவின்பாவின் வள்ளலாங் கண்ணியனே!

14 கண்ணிய வாழ்விலங்கக் கண்ணோர் தமிழ் துலங்கப்
பண்ணினான் பல்தொண்டு பாவேந்தன்;—திண்ணிய
நெஞ்சத்தான்; தீய நெடும்பகைக் கென்றுமே
அஞ்சா திருந்த அரி.

15 அரிமாவைப் போன்ற அடர்நோக்கன்; ஆழ்ந்த அறிவுடையன்;
கரிமாவைப் போலுங் கடுவினை யாளன்; கனித்தமிழை
அரியணை தன்னில் அமர்த்த அயராமல் ஆரியத்தின்
நரித்தன வாலை நறுக்கிடு பாவல் நன்மறமே!

16 நன்மறம் நல்கு நறுந்தமிழ்ப் பாவேந்தன்;
தன்மானம் தாங்குந் தலைமாந்தன்—இன்புதுவை
ஈந்த இருந்தொண்டன்; ஈடற்றான் பாக்கலை
ஏந்தல்கள் ஏவர்க்கும் ஏறு.

17 ஏறாய் விளங்கி எதிர்ப்பஞ்சாக் கோளன்; எழிற்றமிழின்
பேறாய் விளங்கிப் பிழைத்தடுப் பாற்றிப் பிறங்குரிமை
ஆறாய் விளங்கி அகத்தில் புரட்சி அளித்திடுமோர்
வீறாய் விளங்குபா வேந்தன் விடுதலை வேங்கையனே!

18 வேங்கையன்ன வீறுடையன்; வெற்றொழிக்கும் பெற்றியன்;
தூங்கா விழிப்பேற்றுந் தொண்டரசன்,—பாங்குரிமை
தாங்கத் தமிழ்நாடு தன்மானப் பாவேந்தன்
மாங்குயிலாய்க் கூவினான் மாண்பு.

19 மாண்புறத் தாயகம் மாசற மக்கள் மனந்திருந்த
ஆண்மைப் புரட்சி அரிமாவாய் நின்ற அடல் மறவன்;
தூண்போல்வார் தம்மைத்தொடர்பாவால்தட்டித்துணிவளித்து
வீண்மை விரட்டு வியன் பா ரதிதாச வெற்றியனே!

20 வெற்றிக்கு வித்திட்டோன் வெற்றொழிக்கும் முத்தமிழன்
நற்றமிழ்ப் பற்றூட்டி நஞ்சொழித்தோன்;—முற்றுற்றான்
முத்தமிழை மூச்சாக மொய்ம்புமலி பாவேந்தன்
கொத்தடிமை கொள்ளாக் குறி.

காரை-இறையடியான்

மெய்வாழ்க்கை

—தமிழவேள்

"அலகைத் தேரின் அலமறு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை உடலை ஓம்பற்க"

என்பது பட்டினத்தாருடைய பாடல். பேய்த்தேரான கானல் நீரை யும் சுழன்று சுழன்று அடிக்கும் காற்றை ஒத்த பொய்யான உலக வாழ்க்கையையும் அதற்குக் காரணமாக உள்ள உடலையும் போற்று-தீர்கள் என்பது அதன்பொருள்.

இந்த உலக வாழ்க்கை பொய்யானது; மாயமானது. ஆகவே உலக வாழ்க்கையையும் மண், பெண், பொன் ஆகியவற்றையும் வெறுக்கவேண்டும் என்னும் கருத்து நம் நாட்டில் பிறந்த கருத் தன்று; புகுந்த கருத்து; புகுத்தப்பட்ட கருத்து; நம் நாட்டிற்கு வந்த அயலவர்களோடு சேர்ந்து வந்த கருத்தாகும். நமது பண்டைய மரபும் நம் முன்னோர் வழியும் உலக வாழ்க்கையையோ, மண்ணையோ, பெண்ணையோ, பொன்னையோ வெறுக்கச் சொல்ல, வில்லை. மாறாக, போற்றச் சொல்லுகின்றன.

'தொன்மையெனும் உச்சியிலே அறிவால் வாழ்ந்த' நம் முன் னோர் தம் கொள்கைகளையும் விளக்கிச் சொல்லுகின்ற பழம்பெரும் நூல்கள் இரண்டே இரண்டுதாம் இன்று நமக்குக் கிடைத்துள்ளன. ஒன்று இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல் காப்பியம். மற்றொன்று இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற் பட்ட திருக்குறள். தொல்காப்பியமும் திருக்குறளும் உலக வாழ்க்கையை வெறுக்கச் சொல்லவில்லை; உடலை வெறுக்கச் சொல்லவில்லை; மண்ணையும் பெண்ணையும் பொன்னையும் புறக்-கணிக்கச் சொல்லவில்லை. உடலைப் போற்றி மண்ணோடும் பெண் ணோடும் பொன்னோடும் வாழவே சொல்லுகின்றன; வாழ்ந்து மெய் யுணர்வைப் பெறச்சொல்லுகின்றன.

திருவள்ளுவர் தம் திருக்குறளில் உழவு என்று ஓர் அதி-காரத்தை அமைத்து, நிலத்தை உழுது பயிர் செய்யும் உழவுத் தொழிலைச் சிறப்பித்துக் கூறியிருப்பதன் நோக்கம் என்ன? நிலத்தை-மண்ணை வெறுக்கக்கூடாது என்பதுதான். "உலகம் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலின் பின்னே

தான் நிற்பதாக இருக்கிறது. எனவே உழவுத் தொழில் தான் தலையாய தொழில். அச்சாணி இல்லாமல் தேர் எப்படி ஓடாதோ, அப்படி உழவுத் தொழில் இல்லாமல் உலகம் நடவாது. உழுதுண்டு வாழ்பவர்களே உரிமையோடு வாழ்பவர்கள். மற்றவர்கள் யாவரும் உழவர்களைத் தொழுது அவர்கள் பின்னால் சென்று வாழ்பவர்களே" என்கிறார் திருவள்ளுவர்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர். —குறள் 1033

இல்வாழ்கை, வாழ்கைத்துணை நலம், மக்கட்பேறு என்று மூன்று அதிகாரங்களை அமைத்து ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கையைத் திருவள்ளுவர் பாராட்டிக் கூறியிருப்பதன் கருத்து என்ன? பெண்ணை வெறுக்கக் கூடாது என்பதுதான். "அறம் என்று சொல்லப்படுவது ஆண் பெண் கூட்டுறவு வாழ்க்கையாகிய இல் வாழ்க்கைதான். வாழ வேண்டிய முறைப்படி இல் வாழ்க்கையில் வாழ்பவன்தான் தெய்வமாக முடியும். இல் வாழ்க்கையின் இயற்கை அழகு என்பது மனைவியின் நற்பண்பும் நல்லொழுக்கமுமாகிய மாண்பும் என்றால், அந்த இயற்கை அழகுக்கு அணிகலன் போன்றது நல்ல மக்களைப் பெறுதலாகும். இல் வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதி நிலையோடு வாழ்கின்ற பெண்ணைவிட பெருமையுடையதாகச் சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. பெண்ணே பெருமைக்குரியவள் என்கிறார்.

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண் டாகப் பெறின்" —குறள் 54

பொருள் செயல்வகை என்று ஓர் அதிகாரத்தை வைத்துப் பொருளின் இன்றியமையாமையைப் பற்றியும் பொருள் ஈட்ட வேண்டிய தேவையைப் பற்றியும் முறையைப் பற்றியும் திருவள்ளுவர் எடுத்துரைத்திருப்பதன் நோக்கம் என்ன? பொன்னையும் பொருளையும் வெறுக்கக்கூடாது என்பதுதான். பொருள் இல்லாதவரை யாரும் மதிப்பதில்லை. பொருளுடையவரையே எல்லாரும் மதிக்கிறார்கள். பொருள் என்பது அணையாத விளக்கைப்போன்றது. அதனால் எத்தகைய இருளையும்-இடரையும் போக்கலாம். அறத்

தையும் இன்பத்தையும் நல்கவல்லது பொருளே. பொருள் மிகுதியாக ஈட்டியவர்களுக்குத்தாம் புறவாழ்க்கையில் அறமும் அகவாழ்க்கையில் இன்பமும் எளிதில் வந்து சேரும். நமக்குப் பகையாக இருப்பவர்களின் செருக்கை அடக்கி அவர்களை வெல்வதற்குச் சிறந்த கருவியாக இருப்பதும் பொருள்தான். ஆகவே பொருளீட்டுவதில் கருத்தாக இருக்கவேண்டும்.'' என்கிறார்.

''செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்'' —குறள் 759

மருந்து என்று ஓர் அதிகாரத்தை வைத்து உடல் நோயில்லாமல் வாழ்வது எப்படி என்பதைப் பற்றியும், நோய் வருவது எதனால், அதனைத் தீர்ப்பது எவ்வாறு என்பது பற்றியும் திருவள்ளுவர் விளக்கியுரைத்திருப்பதன் நோக்கம் என்ன? உடலைப் புறக்கணிக்கக் கூடாது என்பது தான். ''ஒவ்வொரு வேளையும் உண்ணப் போகுமுன், முன்னால் அருந்திய உணவு செரித்துவிட்டதா என்பதை அறிந்து அது செரித்து விட்டபின் அளவோடு உணவு அருந்தினால் உடம்புக்கு நோய் என்பதே வராது. நோய் வரவில்லையெனில் மருந்தும் தேவையில்லை. ஒன்றுக்கொன்று மாறுபாடில்லாத உணவு வகைகளைத் தேவையான அளவு உண்டுவந்தால் உடலுக்கு ஒரு நோயும் இல்லை; ஒரு துன்பமும் இல்லை. உயிர் இந்த உடலில் நெடுநாள் இருந்து வாழ்வதற்கு ஓர் இடையூறும் இல்லை. முன் உண்ட உணவு செரித்து விட்டதை அறிந்து, நாவிரும்பும் அளவுக்கு உண்ணாமல், வயிற்றின் பசியைப் போக்கும் அளவுக்கே உண்ணல் வேண்டும். அப்படி உண்பதுதான் உடம்பை நோயில்லாமல் பாதுகாக்கும் வழியாகும். உடம்பைப் பெற்றுள்ள ஒருவன் அந்த உடம்பை நீண்டகாலம் காத்துச் செல்வதற்கான வழியாகும் என்கிறார்.

''அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிது உய்க்குமாறு'' —குறள் 943

எனவே மக்களாகப் பிறந்தவர்கள் தம் உடம்பைப் புறக்கணிக்கக் கூடாது; பெண்ணையும் பெண்ணோடு சேர்ந்து வாழும் வாழ்க்கையையும் புறக்கணிக்கக் கூடாது; பொன்னும் பொருளு

மாகிய செல்வத்தைப் புறக்கணிக்கக் கூடாது – என்பவைதாம் நம் முன்னோர் கொண்டிருந்த கொள்கைகளாகும். அப்படியானால் உடலையும் வாழ்க்கையையும் பொருளையும் நம் முன்னோர் நிலையானவை என்று எண்ணியிருந்தார்களா என்றால், இல்லை. அவை நிலையற்றவை என்று மற்றவர்கள் தெரிந்து கோள்வதற்கு முன்னமே தெரிந்து கொண்டிருந்தவர்கள்தாம் அவர்கள்.

**"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்"**

என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்ததுதான். இவையெல்லாம் நிலையற்றவை; உயிரோடு சேர்ந்து வராதவை; அறம் ஒன்றுதான் உயிரோடு சேர்ந்து வருவது; உயிருக்கு ஆக்கம் தருவது. "மிக்க அறமே விழுத்துணை யாவது" என்பதும் அவர்களுக்கு தெரிந்திருந்ததுதான்.

நிலையில்லாத வற்றை நிலையானவை என்று கொள்வது கடைப்பட்ட புல்லறிவு ஆகும்.

**"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. —குறள் 331**

என்பது தமிழ் முன்னோர்கள் அறித்ததுதான். ஆனால் நிலையில்லாதவை என்பதற்காக அவற்றை வெறுக்க வெண்டும்; புறக்கணிக்கவேண்டும், ஒதுக்கிவிடவெண்டும் என்று அவர்கள் சொல்லவில்லை. நிலையில்லாதவற்றை நிற்கின்ற சிறு பொழுதுக்குள் போற்றிப் பயன் காண வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

உடம்பு நிலையில்லாதது. ஆகவே வாழாதீர்கள். இளமை நிலையில்லாதது ஆகவே வளராதீர்கள். செல்வம் நிலையில்லாதது ஆகவே ஈட்டாதீர்கள் என்று சொல்வது நம் முன்னோர் கருத்தன்று.

"உறுதியாக யாரிடத்திலும் செல்வம் நிற்காது. அது வண்டியின் சக்கரத்தைப் போல் ஓடிக்கொண்டேதான் இருக்கும்.

ஆகவே அந்தச் செல்வம் வந்து சேர்ந்த உடன் அந்தச் செல்வத்தைக் கொண்டு நீங்கள் உண்ணுகின்ற உணவைப் பலரோடும் பகிர்ந்து உண்ணுங்கள். அந்தச் செல்வத்தைப் பலரும் நுகரும்படிப் பகிர்ந்து அளித்து வாழுங்கள்.''

''துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லோரோ டுண்க.
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும். —நாலடியார்

''கூத்து நடக்கும் அரங்கிற்கு வந்து சேரும் கூட்டத்தை போல் செல்வம் சிறுகச் சிறுகத்தான்வந்து சேரும். ஆனால் போகும் போதோ அந்தக் கூட்டம் ஒரே நேரத்தில் போய்விடுவதைப் போல் ஒரு சேரப் போய் விடும். அத்தகைய நிலையற்ற தன்மை உடையது செல்வம். ஆகவே அந்தச் செல்வத்தைப் பெற்றால் அதனை நல்லவழியில் செலவிட்டு அதனால் உண்டாகும் நிலையான பயனைப் பெற வேண்டும். செல்வம் சேர்ந்த உடனே நிலையான அறங்களைச் செய்தல் வேண்டும்.''

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்" —குறள் 333

''ஒரு மரத்தில் முற்றியிருக்கும் காயும் கனியும் அப்படியே இருக்க, பிஞ்சு நிலையிலுள்ள காய்கள் காற்றடித்தால் விழுந்து விடுவதும் உண்டு. இளமை என்பது அத்தகைய நிலையாமைஉடையது தான். ஆகவே நாம் இப்போது இளையவர்களாகத்தானே இருக்கிறோம் நல்ல அறச் செயல்களைப் பின்னால் செய்யலாம் என்று இருக்காமல், இளமைப்பொழுதிலேயே – கையில் பொருள் இருக்கும் பொழுதிலேயே – அதனை ஒளித்துச் சேர்த்து வைத்துக் கொள்ளாமல் – செலவிட்டு அறச் செயல்களைச் செய்யுங்கள்''

''மற்றறிவாம் நல்வினை யாமிளையம் என்று
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்.
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு" —நாலடியார்.

"நம் உடலும் உயிரும் ஒன்ருகப் பொருந்தியிருக்கும் வரையில்தான் நம்மால் செயலாற்றமுடியும். உடலை விட்டு உயிர் பிரிகின்ற நாள் என்று வரும் என்று நமக்குத் தெரியாது. அந்த நாள் இளமையி லேயும் வரலாம். அந்த நாள் வந்தால் நா அசையாமற் போய் விடும். நா அடங்கி விக்குள் மேல் எழுந்து உயிர் பிரிந்துவிடும். எனவே நா அடங்கி விக்குள் வந்து உயிர் பிரிகின்ற நேரம் வரு முன்னமே நல்ல அறச்செயல்களை – எல்லா உயிரும் இன்புற்றிருக்க உதவும் செயல்களை விரைந்து செய்யவேண்டும்.

"நாச்சென்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற் சென்று செய்யப் படும். –குறள் 335

"சற்று நேரத்திற்குமுன் தான் பார்த்தேன். அவன் நன்ருகத் தான் இருந்தான். அவன் உட்கார்ந்து இருந்ததையும் பார்த்தேன். அவன் நன்ருக உணவருந்திவிட்டுத்தான் படுத்தானும். படுத்தவன் மீண்டும் எழவில்லையாம். உயிர் போய்விட்டதாம். அவனுடைய உறவினர் எல்லாரும் அலறி அழுகிருர்கள்'' என்று பேசுகிற வகையில் இந்த உடம்பு நிலையில்லாது. புல்லின் நுனியில் காலைப் பொழுதில் கதிரவன் வருமுன்னே நாம் காணும் பனித்துளியைப் போன்றதுதான் இந்த உடம்பு. விரைவில் அழிந்து மறைந்துவிடும். ஆகவே இந்த யாக்கை நிலையாமையை உணர்ந்து இன்றே இப் பொழுதே அறவினையைச் செய்யத் தொடங்குங்கள்; தொடங்கிச் செய்யுங்கள்."

"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை — இன்னினியே
நின்ருன் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்
சென்ருன் எனப்படுத லால்" –நாலடியார்.

"நேற்று நன்ருக இருந்தவன் இன்று இல்லாமல் போய்விட்டான் என்று சொல்லும் நிலையாமையையே தனக்குப் பெருமையாக உடையது இந்த உலகம். இதனை நன்குணர்ந்து நல்லநெறியில் வாழ்ந்து, இயலும் வகையெல்லாம், நேரும் இடமெல்லாம் இடை விடாமல் நல்ல செயல்களைச் செய்யவேண்டும். எப்பொழுதும் எங்கும் இயன்றவரை நல்வினைகளையே செய்து கொண்டிருக்க வேண்டும்.

"நெடுநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு" —குறள் 336
"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வா யெல்லாம் செயல் குறள் 33

இவ்வாறு நிலையில்லாதவைகளைக் கொண்டு நிலையான பயனைத் தேடிக்கொள்ள வேண்டும். என்பதுதான் நம் முன்னோர் கொண்டிருந்த கொள்கையாகும். பெண்ணோடு சேர்ந்து வாழ வேண்டும்; மக்களைப் பெற்று வளர்க்கவேண்டும்; சுற்றத்தினரைப் போற்றி விருந்தோம்பல் வேண்டும்; அன்புடையவர்களாய், ஒழுக்க முடையவர்களாய், அடக்கமுடையவர்களாய், பொறுமையுடையவர்களாய், அழுக்காறுடையாமல், புறங்கூறாமல், பிறர் பொருளை விரும்பாமல், பயனில சொல்லாமல், ஒப்புரவு அறிந்தவர்களாய் தீவினைக்கு அஞ்சுபவர்களாய், பிறருக்கு ஈந்து உதவி செய்பவர்களாய், புகழோடு வாழ வேண்டும் - என்பது தான் அவர்கள் கடைப்பிடித்து வந்த நெறியாகும். இவ்வாறு உலகில் நாம் வாழ்வதன் பயன் என்னவென்றால் நாம் மெய்யுணர்வு பெறவேண்டும் என்பது தான். தொல்காப்பியர் இதனை அழகுறச் சொல்கிறார்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."

"தலைவனும் தலைவியும் இன்பம் நுகர்ந்து வாழும் வாழ்க்கையின் இறுதியில், பாதுகாவல் நிறைந்த மக்களோடும், அறத்தையே நாடுகின்ற சுற்றத்தோடும் கூடியிருந்து, சிறந்ததாகிய மெய்யுணர்வு பெறுகின்ற வகையில் பழகிவருவதே அவர்கள் இல்வாழ்க்கை வாழ்ந்ததன் பயனாகும்," என்கிறார். திருவள்ளுவரும் இதனைத்தான்

"ஐயுணர்வு எழுதிய கண்ணும், பயமின்றே
மெய்யுணர்வு இல்லாதவர்க்கு—குறள் 354

எனக்குறிப்பிடுகிறார். "மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களால், உற்றறிதல், சுவைத்தறிதல், பார்த்தறிதல், முகர்ந்தறிதல், கேட்டறிதல் என்னும் ஐவகையான புலனறிவு

அவற்றித்கு மேலாக எதனையும் நன்கு எண்ணிப் பார்த்து உண்மை அறிதலாகிய மனஅறிவு – மெய்யறிவு – ஒருவர்க்கு அமையவில்லை யென்றால் அவருடைய வாழ்வு பயனற்றதே" என்கிறார்.

வாழ்க்கையின் பயனாகச் சொல்லப்படுகின்ற மெய்யுணர்வு பெறுதல் என்பது தான் என்ன? நம்மைப் பற்றியும் நாம் வாழும் உலகத்தைப் பற்றியும் நம்மையும் உலகத்தையும் இயக்கி வருகின்ற பேராற்றலுடைய இறைவனைப் பற்றியும் தெரிந்துகொள்வதுதான். அதாவது இறைவன், உயிர், உலகம் என்னும் மூன்றைப் பற்றிய தெளிவான அறிவைப் பெறுவதுதான். அந்தத் தெளிவான அறிவை ஏன் பெற வேண்டும்? அந்த அறிவைப் பெற்றால் தான் நாம் மீண்டும் மீண்டும் இந்த உலகில் வந்து பிறந்து பிறந்து இறவாமல் இருக்கமுடியும். "இங்கு கற்க வேண்டியவற்றைக் கற்று மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள் மீண்டும் இங்குப் பிறவி யெடுத்து வராமல் இருக்கும் வழியிலேயே செல்ல முற்படுவர்" என்கிறார் திருவள்ளுவர்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" குறள்: 356

வாழ்க்கை என்பதே இந்த உலகில் உயிரும் உடலும் சேர்ந்து வாழ்வது தானே! உயிரும் உடலும் சேர்ந்து வாழ்வதுதான் வாழ்க்கை என்றாலும் இந்த உலகத்தில் வாழ்வது உயிரே அன்றி உடல் அன்று. உயிர் நிலையானது. உடல் நிலையில்லாதது. உயிர் அறிவுடையது. உடல் அறிவில்லாதது. உயிர் அழியாதது. உடல் அழியக்கூடியது. என்றாலும் நிலையில்லாத, அறிவில்லாத அழியக்கூடிய உடலோடு சேர்ந்துதான், நிலையான உயிர்' அறிவுடைய உயிர், அழிவில்லாத உயிர், உலகத்தை உணர்கிறது. இன்பம் நுகர்கிறது. எனவே உயிர் இந்த உலகில் வாழ்வதற்கு உடல் தேவை. உடல் இல்லையேல் உயிருக்கு இந்த உலகில் வாழ்க்கையில்லை.

உலகம் என்பது நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களால் ஆனதேயாகும்.

"நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"– தொல்காப்பியம்

எச்சரிக்கை!

—அன்புநிலவன்

ஆளை யடித்துண்ணும் நாள்வரு கின்றது!
மூளை புதுக்குவீர் தோழர்களே!—இந்த
வேளை புதுக்குவீர் தோழர்களே!

[ஆளை...]

ஏய்த்துக் கிடந்தனிர்! ஏப்பங்கள் விட்டனிர்!
இடறினீர்! ஏழையைப் படர்துயர் மாட்டினீர்!
தேய்த்துக் கிடத்தினீர்! செல்வங்கள் சேர்த்தனீர்!
தீராத இன்பத்தின் தேன்மிகத் துய்த்தனீர்!

[ஆளை...]

கந்தல் உடுத்துவோர் கண்ணீரைக் கண்டனீர்!
காய்ந்த வயிற்றுறு பள்ளங்கள் கண்டனீர்!
நைந்து கலங்கித்தம் நாட்களை எண்ணியே
நாடொறும் செத்திடும் அந்நிலை கண்டனீர்!

[ஆளை]

மகிழ்வுந்து வண்டியில் மலரெனச் செல்கிறீர்!
மாடிமேல் மாடிகள் கட்டியே வாழ்கிறீர்!
இகழ்வுந்த எரியிடைப் புழுவென மாய்ந்திடும்
எண்ணற்ற ஏழையைக் கண்டும்நீர் என்செய்தீர்!

(40-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்திலுள்ள எந்தப் பொருளும் இந்த ஐம்பெரும் பூதங்களில் ஒன்றுகவோ அல்லது பலவாகவோ தான் இருக்கும்; இருக்கமுடியும். இந்த ஐம்பெரும்பூதங்களுக்கு அப்பாற்பட்டதான ஒன்றை உலகில் காணமுடியாது; காட்டமுடியாது. உடம்பு என்பதும் இந்த ஐம் பெரும் பூதங்களின் சேர்க்கையால் ஆனதுதான். உடலில் இந்த ஐம்பெரும் பூதங்களும் இருக்கின்றன. உடம்பில் எலும்பும் தோலு மாக மண் இருக்கிறது. குருதியாக நீர் இருக்கிறது. உடற் சூடாக நெருப்பு இருக்கிறது. மூச்சு விடுதலாகக் காற்று இருக் கிறது. உடலின் வெளியிடம் இருக்கிறது; வெளி இருக்கிறது.

(தொடரும்)

நிழற்படக்கலை (PHOTOGRAPHY)

—இரா. செயராமன்'

அறிவியல் தந்த ஒளியியற் கருவி:- ஒருவரை நிழற்படமெடுத்தால் அவர் வாழ்நாள் குறையும் என்று மாந்தர் நம்பிய காலமொன்றுண்டு. (வள்ளலார் இராமலிங்க அடிகளை நிழற்படமெடுக்கச் செய்தமுயற்சி ஒரு கால் தோல்வியுற்றதாக அவர் வரலாற்றில் காணப்படுகிறது.) இந்நிலை நீங்கி, நிழற்படமெடுத்தலின் விளைவாக ஒரு புதிய கலைத் துறையே இன்று உருவாகியுள்ளது. இஃதன்றி, அறிவியல் பொறியியல் துறைக் கணக்கீடுகளிலும் நிழற்படமெடுக்கும் முறைகள் கையாளப்படுகின்றன. கண்ணுடி வில்லை (Lens) அமைப் பொன்றைக் கொண்டு ஒரு பொருளின் மேல் ஒளியைப் பாய்ச்சி, அவ்வொளிக் கதிர்களை ஓர் ஒளியுணர் தகட்டின் மேல் குவிக்கையில் பொருளின் மறைவுரு (Latent image) கிடைக்கிறது.

தக்க இயைபியல் மாற்றங்கட்கு உட்படுத்துகையில், தகட்டின் ஒளிபட்ட இடங்களில், ஒளியுணர்பொருள்களான வெள்ளி புரோமைடு, வெள்ளி அயோடைடு (Silver bromide,Silver Iodide) போன்றவை வெள்ளியாக மாற்றப்பெறுகின்றன. ஒளிபடாப் பகுதியில் இருந்த ஒளியுணர்பொருள்கள் கரைந்து விடுகின்றன. தகட்டில் உள்ள வெள்ளித்துணுக்குகள் ஒளிபுக இடந்தரா. ஆகவே தகட்டின் வழி ஒளியைச் செலுத்திப் பார்க்கையில், மறைவுருவைத் தந்த பொருளின் ஒளிரும் பகுதிகள் கருமையாகவும், கருமையான பகுதிகள் ஒளிபுகுந்தன்மையனவாகவும் ஆகின்றன. அதாவது பொருளின் ஒளிரும் ஒளிராப் பகுதிகள் முறைமாற்றப்பட்டுள்ளன. இத்தகட்டில் உள்ள, உருவத்தின் நிழலை உருநிழல் அல்லது உரு வெதிர்நிலை (Negative) எனலாம். இதைத் தக்க ஒளியமைப்புடன் பொருத்தி, நிழலை ஒளியுணர் சுருளில் (Photo Sensitive Film) பிடித்தால் கிடைக்கும் பொருளின் உருவப்பதிப்பை உருப்பதிப்பு அல்லது உருநேர்நிலை Positive) எனலாம். இதை அச்சுத்தாள்களில் படியெடுப்பின் அவை நிழற்படங்களாம் (Photo Graphs).

கருவியும் அதன் உள்ளமைப்பும்:- எல்லாவகை நிழற்படக் கருவிகளிலும் கீழ்க்காணும் பாகங்கள் இன்றியமையாதவை:

(அ) ஒரு பொருளின் உண்மை உருவத்தின் நிழலை ஒளி யுணர்வுத் திரை மேல் விழச்செய்யத் தகுந்த கண்ணாடி வில்லை அமைப்பு (Lens System);

(ஆ) ஒளியுணர்வுத் திரையைச் சரியான நிலையில் பொருத்து வற்கான அமைப்பு;

(இ) கண்ணாடிவில்லை, திரை இவைகளிடையே உள்ள இடத்தை மூடியிருக்குமாறு. ஒளியடக்கமான (Light tight) பெட்டி போன்ற அமைப்பு;

(ஈ) கண்ணாடி வில்லையை திறந்து வைக்கவும். மூடவுமான மூடி.

(உ) பார்வை ஆடி (நிழற்படமாகும் பொருளின் உருவத்தைக் காண)

கண்ணாடி வில்லை அமைப்பு சில வில்லைகள் கொண்டது. கிடைக்கும் ஒளியினளவுக்குத் தகுந்தபடி கண்ணாடி வில்லை அமைப்பைப் பொருத்திக் கொள்ள ஏந்துகள் உள்ளன. வில்லையில் படும் ஒளியை வேண்டுமளவுக்கு மாற்றிக் கொள்வதற்கும் தக்க சுருங்கி விரியும் அமைப்பு உண்டு.

ஒளியடக்கமான பெட்டி பெரும்பாலும் மடிப்புகள் கொண்ட தோற்பெட்டியாகவே அமைக்கப்பெறுகிறது. மடிப்புகளைச் சுருக்கி விரிப்பதாலோ, அல்லது வில்லை, மூடி இவற்றை முன்புறமோ, பின்புறமோ திருகுவதாலும் உருவத்தின் நிழலைச் சுருளில் சரியாக விழச் செய்யமுடிகிறது. ஒளி புகுவதற்கான திறப்பு, ஒரு கம்பிச் சுருளின் இழுப்புவிசை(Tension)யைச் சரியாக்குவதால் தக்க வாறு அமைகிறது.

ஒளியுணர் பொருளும், சுருளும்:- ஒளியுணர் சுருளின் ஒளி யுணர் பொருள் துல்லியமான களிப்பாகில்(Gelatine) கலந்த வெள்ளிக்கூட்டுப் பொருள் (Silver bromide, Silver iodide) துணுக்குகளின் படிவு ஆகும். இவ் வொளியுணர் பொருள் சிறப் பான இயைபியல் முறையில் செய்யப்பட்டு, கண்ணாடித் தகட்டின் மீதோ, நெகிழித் தகட்டின் மேலோ, தாளின் மீதோ பூசப்படும். வெள்ளிக் கூட்டுப்பொருளேயன்றி, ஒளியுணர்விகளான கந்தகக் கூட்டுப் பொருள்களும், சிலவகைச் சாயங்களும், கடினப்படுத்தும்

பொருள்களும் சில சமயங்களில் சேர்க்கப்படும். இவ்வெதிர் படிவு 0-03 முதல் 004 கீ. ஆ. கோர் தடிப்புடன் இருக்கும். நேர் படிவு இன்னும் சிறிது தடிப்பு மிகுதியானது.

நிழற்படமெடுக்கும் முறை:- உருநிழலைப் பிடிக்க நிழற்படக் கருவி (Camera) ஒரு தாங்கியின் மேல் பொருத்தப்பட்டு, பொருளின் முன் நிறுத்தப்படுகிறது. பொருளின் நிழல் நன்கு தேய்க்கப்பட்ட கண்ணாடி ஒளியுணர் தகட்டின் மேல் குவிக்கப்படுகிறது. ஒளித்துளை முழுவதும் திறந்திருக்குமாறு வைக்கப்படுகிறது. வெண்படலத் திரை, துளைத்திறப்பின் அளவைச் சரி செய்யப் பயன்படுகிறது. பின் மூடி மூடப்படுகிறது. ஒளியுணர் சுருள் தக்க தாங்கியில் வைக்கப்பட்டு, இருளில் நிழற்படக்கருவியில் திணிக்கப்பெறுகிறது: தகடு தாங்கியின் உறை களையப்பெற்று, தக்க ஒளிபடும்படி செய்யப்படுகிறது. உறை மறுபடியும் தகடு தாங்கியில் மாட்டப் பெறுகிறது. எதிர்வினை (Reflex) நிழற்படக் கருவிகளில் தேய்ப்புக் கண்ணாடித்திரை, கண்ணாடிவில்லையின் பின் வைக்கப்பெறாமல், கருவியின் மேற்பகுதியில், வில்லையிலிருந்து ஒளி செல்லும்பாதைக்குச் செங்குத்தாக வைக்கப்பட்டிருக்கும். வில்லையிலிருந்து ஒளி செல்லும் பாதைக்கு 45 பாகை சாய்த்து வைக்கப்பட்டுள்ள ஒரு சமதள ஆடியின் உதவியால் பொருளின் உருவத் தோற்றம் தேய்ப்புக் கண்ணாடித் திரையில் விழும்.

நிழற்படக்கருவியில், ஒரே வகையான இரு கண்ணாடி வில்லைகள் உள. ஒன்று பொருளின் உருவைத் தேய்ப்புக் கண்ணாடித்திரையில் விழச் செய்யவும், மற்றது பொருளின் உருவைச் சுருளில் விழச் செய்யவும் பயன்படுகிறது. தக்க ஒளிப்புத்தரின், பொருளின் உருவம் சுருளில் விழும்; அதே நேரத்தில் பொருளின் உருவத்தை நாம்காணவும் முடியும்.

தெளிவாக்கல் (DEVELOPING):- நிழற்படச் சுருளில் உள்ள மறைந்துள்ள (Latent) உருவத்தோற்றம் கட்பார்வைக்குப் புலனாகும்படி செய்ய அதைத் "தெளிவாக்கல்" வேண்டும். தெளிவாக்கப்பட்ட சுருளின் உருவத்தில், பொருளின் பல பகுதிகளின் ஒளிரும் அளவுக்குத் தக்கபடி வெள்ளி படிந்திருக்கும். ஒளி படா இடங்களில் வெள்ளிப் படிவு இராது. சில கரியக் குறைப்பான்களைப் [Organic Reducers] பயன்படுத்தி இயைபியல் தெளிவாக்கு முறையே பெரும்பாலும் கையாளப்படுகிறது.

''தெளிவர்க்கி'' (கரைசல்–Developer), குறைப்பான்கள், காக்கும் பொருள்கள், முடுக்கி, (Accelerator) தடுத்து நிறுத்தும் பொருள்கள் (Restrainers) கொண்டதாகும். Pyrogallal, Metol Hydro Quinone முதலிய வற்றில் ஒன்று குறைப்பானகப் பயன் படுகிறது. இக்குறைப்பான்கள், சுற்றுப்புற உயிரகத்துடன் கூடி உயிரகை (Oxide) ஆகிவிடுவன. ஆதலால் நெடுங்கால வைப்புக்கு அவை நன்கு அடைக்கப்பட்ட கண்ணுடிப்புட்டிகளில் வைக்கப்படவேண்டும். காக்கும் பொருளான சோடியம் சல்பைட்டு போன்ற பொருள்களைச் சேர்ப்பதன் மூலமும் " தெளிவாக்கி " யை நெடுநாள் வைத்திருக்கலாம். கரைசலில் காக்கும் பொருளின் அளவே, குறைப்பானின் அளவை விட மிகுதியா யிருக்கும். கரை-சலில் இரு குறைப்பான்கள் இருப்பின் சுற்றுப்புற உயிரகத்துடன் கூடுவதற்கான வாய்ப்பு குறைகிறது.

''தெளிவாக்கி''யின் செயலூக்கம், கரைசலில் காரத்தன்மை (Alkalinity) மிக மிக, வளர்கிறது. இக்காரப்பொருள்கள் முடுக்கிகள் (Alkalis) எனப்படும். Sodium Corbonate* முடுக்கிகளில் ஒன்ருகும். குறைப்பான்கள், வெளித்தோன்றும் வெள்ளிக் கூட்டுப்பொருள்களை மட்டுமே குறைக்கவேண்டும். வெளித்தோன்ரு வெள்ளிக் கூட்டுப் பொருள்களை அப்படியே விட்டுவிட வேண்டும். இத்தனிச் சிறப்புச் செயல் குறைப்பானை மட்டுமன்றி, மற்றும் சில பொருள்களையும் சார்ந்துள்ளது. பட்டறிவில் ''பொட்டாசியம் புரோமைடு'' இதற்குச் சிறந்ததெனக் கண்டறியப்பட்டுள்ளது. 70^{0} F வெப்ப நிலைக்குமேல் களிப்பாகின் (Gelatine)சுருங்குந்தன்மையைக் கருதி, ''தெளிவாக்கி'' 65^{0}F-70^{0}F வெற்ப நிலையில் வைக்கப்பட வேண்டும். கரைசலைச் சீராகக் கல்க்குவது சீராக, விரைவாகத் ''தெளிவாக்க'' உதவும். ''தெளிவாக்கல்'' இருட்டறையில் காப்பு ஒளியுடன் செய்யப்படல் வேண்டும்.

பொருத்துதல், கழுவுதல், காயவிடல்:- தெளிவாக்கப்பட்ட பிறகு, உருநிழல் (Negetive) மேலும் தெளிவாதலைத் தடுக்க 28 விழுக்காடு அசிட்டிகக்காடி கலந்த கரைசலில் அலசப்படுகிறது. இதனுல் உருநிழலில் கீறல்கள், சிராய்ப்புகள் ஏற்படுவதில்லை. மேலும்

---

* சோடா சாம்பல் (Soda ash) எனவும் வழங்கப்படும்.

காரப்பொருள்களும் நீக்கப் பெறுகின்றன. சுருளைக் கெட்டியாக்கவும் சுருங்காமற் றடுக்கவும் "குரோம் ஆலம்" கரைக்கப்படுகிறது.

பொருத்து கரைசல் 30%—40% "Hypo" கரைசலாகும். இதில், தெளிவாக்கப்பட்ட நிழலுரு வைக்கப்பட்டால், 10-15 மணித் துளிகளில், தாக்கப்பெறாத வெள்ளிக்கூட்டுப்பொருள் கரைகிறது. இதன் பின், உருநிழல் அதில் ஒட்டிக்கொண்டுள்ள கரைசல்களும் இயைபியற் பொருட்களும்(கரைவன) நீங்கும்படி கழுவப் பெறல் வேண்டும். Hypo கரைசல் நீங்குவதற்காக உருநிழல், தொடர் போக்குடை நீரில் கழுவப்பட்டுக் காயவிடப் பெறுகிறது.

அச்சிடல் (Printing) :- உரு நிழலில் ஒருவித வண்ண இயல்புத் திருப்பம் (Tone Reversal) நிகழ்கிறது. பொருளின் பளபளப்பான பாகங்கள் கருமையாகவும், இருண்ட பாகங்கள் ஒளிபுகுவனவாகவும் காணப்படுகின்றன. உருநிழலிருந்து நிழற் படம் (Photograph) அச்சிடுகையில், உருநிழலின் வண்ண இயல்புகள் திரும்பப் பெறுகின்றன. நிழற் படங்கள் அச்சிடலில் இருமுறைகள் உள்ளன.

(1) தொடர்பு முறைகள் (Contact Process) :- இம்முறையில் உருப்பதிப்பு (Positive) எந்த அளவினதாகவும் இருக்கலாம். உருநிழலும், உருப்பதிப்பும் வெவ்வேறு அளவினவாயின், "பெரி-தாக்கி" (Enlarger) யைப் பயன்படுத்தலாம். தொடர்பு அச்சு அச்சுச் சட்டத்தின் மேல், உருநிழல் அதன் படிவுப்பக்கம் பொருதும் படி மேனோக்கி யிருக்குமாறு, பொருத்தப்படுகிறது. அதன் மேல் அச்சுத்தாளின் படிவுப்பக்கம் பொருந்தும்படி வைக்கப்படுகிறது. ஒவ்வொரு உருநிழலுக்கும் தக்க அச்சுத்தாளைப் பயன்படுத்தவேண்டும். அச்சுச் சட்டத்தை மின்னொளி அருகில் கொணர, ஒளி உரு நிழலின் வழி பாய்ந்து அச்சுத்தாளின் மேல் விழுகிறது. தக்க திறப்புக் கொடுக்கப்பட்டு, அது தெளிவாதல், நீரில் அலசுதல் முதலிய செயல்களுக்கு உட்படுகிறது.

(2) வீழ்த்து முறை (Projection Process) :- இம்முறையில் ஒளியமைப்பும், வீழ்த்து வில்லையும் உள்ள 'பெரிதாக்கி' பயன் படுத்தப்படுகிறது. உருநிழல் ஒளி அமைப்புக்கும் வில்லைக்கும் இடையே, படிவுப்பக்கம் கீழிருக்குமாறு வைக்கப்படுகிறது. வில்லை

யால் உண்டாக்கப்படும் உருவம் சிறு மேடையுடன் பொருத்தப்பட்ட ஒரு தாளில் விழும்படி குவிக்கப்பெறுகிறது. இப்பொழுது மின் விளக்கு அணைக்கப் படுகிறது. நிழற்பட (அச்சு) த்தாள் அச்சிறு மேடைமேல் படிவுப்பக்கம் மேலிருக்கும்படி வைக்கப்படுகிறது. இதனால் வீழ்த்தப்பெறும் உருவம் தாள் மேல் விழும். இப்பொழுது மின் விளக்கேற்றத்தக்க திறப்புத்தரின் தாளில் நிழற்படம் விழும். இத் தாள், தெளிவாக்கல் நீரில் அலசல், பொருத்தல், கழுவல், காய வைத்தல் முதலிய செய்கைகட்கு உட்படுகிறது. அச்சுத்தாளில் விழும் படத்தை மேலும் அழகூட்டும் (Touching) முறைகள் உள.

நிழற் படக்கலையின் வளர்பயன்கள்.- நுண் நிழற் படக்கலை (Photo micrography) பொறியியற்றுறையிலும், மாழைத்தொழிற்றுறையிலும் (Metallurgical industry) மிகப் பயன்படுகிறது. நிழற்பட அளவையீடு (Photographic Survey) மலைப்பாங்கான நிலங்களை அளத்தலில் பெருந்துணை புரிகிறது. விண்வெளி ஆராய்ச்சியிலும் நிழற்படங்கள் பல உண்மைகளை வெளிப்படுத்தி வருகின்றன. இவ்வாறு நிழற்படக்கலையின் சிறப்பு மேலும் மேலும் வளர்ந்து வருகிறது. o

---

நாடகக்கலை

(நாடகத் துறைக்கென்றே வெளிவரும் மாதஇதழ்)

சிறப்பாசிரியர்:- ஆறு. அழகப்பன், M. A., M. Lt.

உறுப்பினர் கட்டணம்:—

ஆண்டுக் கட்டணம் உரு. 6—00

வாழ்நாள் கட்டணம் உரு. 100—00

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :—

மேலாளர்,

நாடகக் கலை

202, சானி சான் கான் தெரு, சென்னை-14.

'அந்நாள் விரைவில் வரும்'

இந்த எரிமலை என்று வெடிக்கும்
இங்கு விடுதலை என்று பிறக்கும்?
இந்த அமைதியின் உட்பொருள் என்னே?
எரிமலை வெடிக்குமுன் இலங்கிடும் பொறுமையோ?

[வேறு]

ஆயிரம் வேட்டெஃகம்
ஒன்ருய் முழங்கிடும்
அந்நாள் விரைந்துவரும்!—பல்
ஆயிரம் விடுதலை
முழக்கங்கள் வானத்தைப்
பிளக்கின்ற காலம்வரும்!—மலை
வெடிக்கின்ற நேரம் வரும்!

கோடான கோடித்
தலைகள்இம் மண்ணிலே
உருள்கின்ற வேளைவரும்!—அதை
நாடிப்பல் கோடிக்
கழுகுகள் விண்ணிலே
திரிகின்ற கோலம் வரும்!—தீ
எரிகின்ற காலம் வரும்!

தில்லியன் யாகியா
கானுய்வந் தேகளி
யாடிடும் காட்சி வரும்!—அதற்[கு]
எள்ளள வும்சலி
யாத விடுதலை
வெம்படை பாய்ந்து வரும்?—தமி
ழர்படை ஆர்ந்துவரும்!

காவேரி யாற்றினில்
பொங்கி வரும்புனல்
செந்நிறம் ஏந்திவரும்!—அது
மூவாயி ரம் ஆண்டுத்
தமிழர் தாள் வாழ்வுக்கு
முடிவொன்று காட்டிவரும்!—புது
விடிவொன்று தோற்றிவரும்!

—இரணியன்—

சட்டமும், மக்களும், அரசும்...!

புலவர் தி. நா. அறிவுஒளி.

காளாம்பிகள், மழை பெய்து மண் குளிர்ந்தபின் காணும் இடமெல்லாம் காட்சி தரும். அவை மண்டி மிடைந்திருக்கும் காட்சியைக் காண்போர், 'உலகமெல்லாம் காளாம்பியே நிறைந்து விடுமோ?' என்று வியப்பர். ஆயினும் உறுதியான மரத்தின் விதை மண்ணுக்குள் புதைந்து ஒளிந்திருக்கும். காளாம்பிகள் காற்றாலும், வெயிலாலும், தம்மியற்கை ஊழலாலும் சிதைந்தும் தீய்ந்தும், மாய்ந்தொழியும். வித்திலிருந்த மரம் சிறு செடியாக மெல்லத் தலைகாட்டி, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ண முமாகக் கிளைத்துத் தழைத்து வளர்ந்து நிலை நெடுமரமாகி நீண்ட காலம் வாழும்.

அரசியலிலும் இந்நிலையே அமையும். ஆரவார அரசியல் காளாம்பி போல் மயக்கமூட்டிப் பின் உருக்குலையும். அறிவுநெறி அரசியல் நெடுமரமாய்க் காலமெல்லாம் ஓங்கி யொளிரும்.

உயிருள்ள மக்களால் உருவாக்கப் பெறுவது அரசியல். ஆகவே அரசியல் மாறுதல்களையும், வளர்ச்சிகளையும், புதுப்பித்துக் கொள்வதையும் இடையறாது மேற்கொள்ளும்.

குடியாட்சி மக்கள் நலனுக்காக அமைவதே. அமெரிக்கப் பாவலன் வால்ட் விட்மன்,

> "ஏ நண்பா! நீயும் குடியாட்சி, தேர்தலுக்காகவும், அரசியல் செயற்பாடுகளுக்காகவும், கட்சிப் பெயருக்காகவும் ஏற்பட்ட தென்று நினைத்து விட்டாய்? நான் கூறுவதைக் கேள். குடியாட்சி அங்கு நடத்தப்படுகிறதேயன்றி, அஃது அங்கு நின்று, மேல் வளர்ந்து பூத்து, மக்களின் நடத்தையிலும் அவர்களிடையில் தோன்றும் மேலான தொடர்பிலும், அவர் தம் எண்ணங்கள், சமயங்கள், இலக்கியம், கல்லூரிகள், பள்ளிகள் யாவற்றிலும் கனிகள் நல்குகிறது. தனி வாழ்க்கையிலும் பொதுவாழ்விலும் குடியாட்சி ஏற்படுகிறது'

என்று கூறுகிறான். கட்சிகள், கட்சிக் கொள்கைகள், தனியர்களான தலைவர்கள், தலைவரின் கூட்டங்கள். தேர்தல்கள், தேர்தல் முடிவுகள், அதன் எதிரொலிகள் ஆகியவை என்னவென்று கண்டு அதற்கேற்ப உருவாவதன்று அரசியலும், அரசியல் கொள்கைகளும்

இவையனைத்தும் குடியாட்சியில் அமையும் சில 'நிலைமைகள்' அல்லது 'படிமுறைகள்' ஆம்.

குடியாட்சி நெறி தனி மாந்தர் நலனில் தொடங்கி, தனியார்களின் கூட்டுத்தொகையான குமுகாய நலன் வரை வளர்ந்து பரவுவது. அந்நிலை அமையும் நாட்டில்தான் மெய்க் குடியாட்சி நிலவுகிறதெனக் கூறமுடியும்.

திரு. சான். டி. இரீட்டு எனும் பேறிஞர், 'குடியாட்சியின் முறைப்படி ஒரு மாந்தனுடைய சிறப்பு அவனுக்குப் பிறரால் அளிக்கப்பட்டதன்று. சட்டத்தின் வாயிலாக வந்ததன்று. மாந்தன் என்ற முறையில் அது அவனுடைய பிறப்புரிமையாம், குடியாட்சியில் ஒவ்வொரு தனி மாந்தனும் இன்றியமையாதவன் ஆவான் அவனுடைய நலன் தன்னிலேயே இன்றியமையாதது. குடியாட்சி முறையின் கொள்கைகளின்படி, மாந்தனின் உயிர் மதிப்புள்ளது. அஃது அரசைக் காட்டிலும் மிக இன்றியமையாதது' என்று கூறும் கருத்து குடியாட்சியின் மாட்சியைத் தெளிவாக்குவதாகும்.

கட்சிச் சாய்கால் என்பதை வல்லரசு போல ஆக்கவும் குடியரசு நிலவும் நாட்டில் வாய்ப்புண்டு. முடியாட்சியின் குறைகள் மாற்று வடிவில் குடியாட்சியில் இடம் பெறுவது நடைமுறையில் உலகில் காணக்கூடிய உண்மை. இந்நிலையை அறிந்து, மெய்க் குடியாட்சி முறையை யமைக்க அறிஞர் குழுக்கள் முயலவேண்டும்.

தனிமாந்தன் ஓர் அடிமையை வைத்திருப்பது எவ்வளவு குற்றமோ, அவ்வாறே ஒரு கட்சியும் தொண்டரை அடிமையாக ஆக்குவதும் குற்றமே. அதே போல் ஓர் அரசும், ஒரு நாடும் பிற அரசை-நாட்டை, அடிமைப்படுத்துவது கொடுங்குற்றமாம்.

அபிரகாம் இலிங்கன், "நான் எவ்வாறு ஒரு அடிமையாய் இருக்க இசையேனோ, அவ்வாறே ஓர் ஆண்டையாகவும் இருக்க மாட்டேன். நான் கண்ட குடியாட்சியின் குறிக்கோளும் இதுவே. இதிலிருந்து எது எது மாறுபடுகிறதோ, அது அது, மாறுபடும் அளவிற்கு குடியாட்சியாகாது". என்று கூறுவதை விரிவுபடுத்தி யமைத்துக் கொள்ளவேண்டியது நம் கடைமையாகும்.

இக்காலத்து அரசியலில் "மறைமுக அடிமைத்தனங்கள்' வளர்ந்து ஆட்டமிடுகின்றன. குறிப்பாக ஒருநாட்டு அரசியலமைப்புச்

சட்டமே கூட-மக்களை அடிமைப்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது. மறைமுக அடிமைத்தனம், மறைமுகக் கட்டாயம் என்ற இரண்டுமே கொடுமையானதுதான்.

'அரசிலமைப்பு நாட்டுமக்களின் சொத்தேழிய,
அரசு நடத்துபவரின் சொத்தன்று"

என்று தாமசு பெயின் (மாந்தருரிமைகள் பகுதி II) மொழிந்த கருத்து ஆய்வுக்குரியதாகும். ஆகவே, ஓர் அரசியலமைப்புச் சட்டம் அடிக்கடி மாறுதலுக்குட்படுத்தப்படுவது இன்றியமையாததே. அரசியலமைப்புச் சட்டம் திட்பமுடையதாக இருக்கவேண்டும் என்று கூறுபவர்கள், அரசியலமைப்புச் சட்டத்தை மக்கள் மதிப்புக்கு மேற்பட்ட - தெய்வத்தன்மை வாய்ந்தது போன்ற - மறைநூலாக ஆக்கக்கருதும் சூழ்ச்சித்திறன் கண்டித்தற்குரியது. அரசியலமைப்பு மக்கள் நலனைக் காக்கும் அரணாக இருத்தல் வேண்டும்.

"சட்டங்கள் மக்களின் வேண்டுதல்" நம்பிக்கை மனப்பான்மை, ஆகியவற்றை ஒட்டியுண்டாகின்றன என்பது உண்மையாகும். குடியாட்சி முறையில் மக்களுக்காக மக்களால் இயற்றப்பெறும் சட்டங்களில் உடன் பிறப்பாள மனப்பான்மை எதிரொலிப்பது இயல்பு", என்று அமெரிக்க அரசியலாளர் கருதுவர். ஆயின், நடைமுறையில் குடியாட்சி அரசுகளில் "மக்களுக்காக மக்களால்"இயற்றப்பெறும் சட்டங்கள் அன்புணர்வோடு அமையாமல், ஒரு குறிப்பிட்ட சாராரை நசுக்சி, மிதித்து அடிமையாக்கிட மறைமுகமாகச் சூழ்ச்சியாக - கரவாக-முயலும் நிலையைக் காண்கிறோம். இதனை ஒழிக்க அரசியலமைப்பில் வலிமையான அரண்கள் வேண்டும்.

ஐசனோவர், "சட்டம் என்பது அவ்வப்பொழுது இருக்கும் நிலைமையை வலிமையாக்கி நிலையானதாக்கும் ஓர் உறுதிமிக்க அமைப்பன்று. அதற்கு மாறாக, ஒரு சட்டநெறி ஆட்சி அல்லது முறிக்க முடியாத ஒப்பந்தம், வேறெந்தக் காரணத்தையும் விட மிகுதியாய்ப் பொருளியற் புரட்சிக்கும் வளர்ச்சிக்கும் காரணமாயிருந்திருக்கின்றது" என்று உரைத்த கருத்து (தில்லி பல்கலைக் கழக உரை, 1959) உடனெண்ணத்தக்கது. சட்டம் நெகிழ்ச்சியும் குழைவும் உடையதாயிருத்தல் வேண்டும்.

சட்டம் செல்வர் – செல்வாக்கிஞல்– கைப்பாவையாகவே பல நூற்ருண்டுகளாக விளங்கி வந்தது. இன்னும் அந்நிலையிலிருந்து மாறுபட வில்லை யென்பதை உணர் தல் வேண்டும்.

‡"கடந்த குமுகாய வரலாறு, ஏழை – முதலாளி என்ற இனங்களின் போராட்ட வரலாறு" என்ற மார்க்சின் கொள்கையில் சட்டங்களின் முரண்பாட்டுப் போராட்டமும் உள்ளடக்கமே.

"புதுக்கருத்துகளைப் பெற கருவுற்றிருக்கும் பழங் குமுகாயத்திற்குப் போராட்டமே மருத்துவச்சி" என்று மார்க்சு குமுகாயச் சீர்திருத்தத்திற்குப் போராட்டத்தை – புரட்சியை–வற்புறுத்தினுர்.* பழமை, சட்டம், நம்பிக்கை, மரபு, வழிவழிநடப்பு என்பவற்றைக் காட்டி மருட்டி மயக்கி எளியவரை – நல்லோரை–உழைப்போரை அடக்க முயல்கிறது. அதஞற்ருன் வன்முறைப் போராட்டத்தை மார்க்சு வாழ்த்திஞர். அறிவுப் போராட்டமும், அறப்புரட்சியும் இத்துறையில் மலர்ச்சிக்கு உதவும். சட்டக் கொடுமைகள் கரந்துறையும் நோய் போல் குமுகாயத்தை உள்ளுக்குள் அரிக்கும் இயல்பின. அதனை அறிவுப்புரட்சியால் – அறமருந்தால் – களைய வேண்டும்.

தோமாசு அக்யூஞசு. [கி. பி. 1225-1274] ஓர் இத்தாலிய துறவி; 'அவர்எல்லா அரசியல் அதிகாரமும் பொதுமக்களின் உரிமையினின்றே வருவது; எல்லாச் சட்டங்களும் மக்களால் அல்லது மக்களின் மாற்றுறுப்பினர்களால் இயற்றப்பட வேண்டும்" என்கிருர்.

அரசியல் கருத்துகளை அழகுற வகுத்த பிற்கால அவ்வையார்,

"நாடொப்பன செய்"

"தேயத்தோ டொத்து வாழ்" என்று ஆத்திசூடியில் கூறிஞர். 'நாடு' என்ற சொல் 'நாட்டு மக்கள்' என்று பொருள் கொள்ளும். 'நாட்டு மக்கள் ஒப்பும் சட்டங்களை — நிகழ்ச்சிகளை —மட்டும் செய்க' என்று அரசியலார்க்கு அறிவுறுத்துகின்ருர். மற்றும் "நாட்டு மாந்தர் கருத்தறிந்து அதற்கேற்ப மக்களும் அரசும் ஒத்தி

‡ "The History of all past society is the history of the struggle between classes" (Marx-Communist Manifesto)

*'Force is the midwife of every old society pregmant with 'a new one." (-Marx)

யங்கி வாழவேண்டும்'' என்று அவ்வையார் உரைக்கின்றார். இதே கருத்தை சியார்சு பாங்கிராப்டு;*

''மேன்மையான ஓர் அரசைத் தாங்கி நிற்போர் பொது மக்களே யொழிய 'ஒரு சிலர்' அல்லர்; மாந்தரே யல்லாமல் சொத்துக்களல்ல; உரிமையாய் வரும் பொதுமக்களின் கருத்தே யன்றி அதிகாரமன்று; சட்டத்தின் உண்மையான நோக்கம் பொது மக்களின் மகிழ்ச்சியே யாகும். தம் நன்மையை யுணர்ந்து, அதைத் தாங்களே காக்க எழும் பொது மக்களின் கூட்டத்தாற்றான் அதனைக் காக்க வியலும்'' என்பர்.

கொடுமையால்-ஒறுப்பால்-மக்களை அடக்கித் தம் வழிப்படுத் தலாம் என்று எண்ணும் எவ்வரசியலாரும் நீடுநிலைப்பதில்லை யென்பதை உலக வரலாறு நிலை நாட்டுகிறது. வல்லரசுகள், பேரரசர்கள், வல்லாண்மையர்கள் வீழ்ந்தமையை யாரே அறியார்? அருளாளர்களும் வெறுத்துப்பழிக்கும் கொடியோரை மாந்தரோ போற்றுவர்? வடலூர் இராமலிங்க அடிகளார்,

"கருணையில்லா ஆட்சி கடுகி யொழிக
அருள் நயந்த நன்மரார்க்கர்ஆள்க—தெருள் நயந்த
நல்லோர் நினைத்த நலம் பெருக நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து." (திருவருட்பா)

என்ற பாடலில் அருளின்றி வல்லமையால் ஆளும் ஆட்சி விரைந்தொழியத் தக்கது என்று கூறி, மக்கள் அவ்வாட்சியை விழ்த்தவேண்டும் என்று அகப்புரட்சி மூட்டுவதை உன்ன வேண் டும். 'நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்' (Violence is the worst meanness) என்ற 'கொன்றை வேந்தன்' கொள்கையும் ஈதேயன்றோ?

டி ரா கொனெட்டி (1738-1718) என்ற இத்தாலிய அரசி யல் நூலாசிரியன், 'நற்பண்புகளும் அதன் பரிசிலும்' என்ற நூலில் "அரசியலாளியின் பணி யாதெனில், இன்ப வாழக்கைக்கும், விடுதலை யுணர்வுக்கும் அடிகோலுவதேயாம். நாட்டிற்குக் குறைவான செல வில் தனியார்க்கு மிகுதியான இன்பத்தை யளிக்கவல்ல ஆட்சி

* 1828 இல் அமெரிக்கக் குடியாட்சித் தலைவரான ஆண்ட்ரு சாக்சனின் வரலாற்றை எழுதியவர்.

முறையை வகுக்க வல்லவன் என்றென்றும் மக்களின் நன்றிக்கு உரியவனுயிருப்பான்" என்கிறன்.

ஆகவே, அரசுகளும் அரசியலாளர்களும் 'மக்கள் இன்பமே நாட்டின்பம்; அரசின்பம்" என்பதைத் தெளிவாக உணரவேண்டும். சட்டங்களை மக்களிடம் திணிக்க முனையும் அறியாமையைக் கை விட்டு, மக்களிடமே சட்டம் தன் விருப்பமாக, இயல்பாக மலரு மாறு செய்ய அறிவியல் நெறியோடு முன்வந்து பணியாற்ற வேண்டும். வள்ளுவநெறி மக்கள் உள்ளத்தில் நெறியை விளைவிப் பதே. சட்டத் திணிப்பை விட, மனமலர்ச்சி வரைவே நற்பயனளிப் பது; நீடு நிலைப்பது!

"குழுகாயத்தினுலும், நாகரீகத்தினுலும் எளிதில் அளிக்க வியலாத சில வாய்ப்புகளை அளிக்கவே அரசு வேண்டியுள்ளது" என்று தாமசு பெயின் (மாந்தருருமைகள்: பகுதி: II) கூறியது உண்மையாக வேண்டுமாயின், மக்கள் சிறப்புறும் வகையில் ஆட்சிகள் அமைதல் வேண்டும்.

"அரசு என்பது ஒரு தேசியக் கூட்டுறவே. இக்கூட்டுறவின் நோக்கம், தனியாளர்கள் - மக்கள் கூட்டத்தினர் யாவருடைய நலத்தையும் வளர்ப்பதே. ஒவ்வொரு மாந்தனும் தனது தொழிலை நடாத்தி, உழைப்பின் பயனையும், சொத்தில் கிடைக்கும் ஊதியத் தையும் அடையவே விரும்புகிறன். இவ்வாவல்கள் நிறைவேறி விட்டால் எக்கொள்கைகளுக்காக அரசுகள் அமைய வேண்டும் என்று விரும்புகிறேமோ, அவை கைகூடி விடுகின்றன". (மாந்தர் உரிமைகள் பகுதி: II) என்று தாமசு பெயின் கூறுவதை யாவ ரும் தெளிதல் வேண்டும்.

அரசு, 'கொடை, அருள், செங்கோண்மை, குடியோம்பல், (குறள்: 390) என்ற நாற்குணங்களுடைத்தாகல் வேண்டும்' என்று திருவள்ளுவருரைத்த மாட்சியே மேனுட்டாரின் அரசியல் விளக்கங் களுமாம்.

அரசு, நிலையான தாயில்லாமல் குலையும்; மக்களும், நாடும், நிலைத்து நிற்கும். ஆகவே கட்சியோ, அரசோ, முதன்மையானது என்று கூறப்பெறும் கருத்து பொய்யானது. அதே போல் சட்ட மும், அதிகாரமும் கூட நிலைத்து நிற்பவையல்ல. நிலையில்லாத வற்றை நிலையானவை என்று கருதுவதே பேதைமையாகும். 'மக்கள் உள்ளமே உண்மையான அரசியலமைப்பு; மக்கள் எண்ணமே அரசி லமைப்புச் சட்டம்; மக்கள் வாழ்வே அரசியலின் வடிவம்!" இவ் வுண்மையை மக்களும், கட்சிகளும், அரசுகளும் உணர்ந்து ஒழுகினுல் அரசியல், அரசியலாக இருக்கும், 0

கிரே உடற்கூறு நூல்!

—மொழி பெயர்த்தல்—

மருத்துவ மாணவர்க்கு ஒரு வேண்டுகோள்!

புதுவை 'சிப்மேர்' (JIPMER) மருத்துவக் கல்லூரியில் நான்காம் ஆண்டு மருத்துவம் பயிலும் மாணவர் திரு. கி. அரிமா மகிழ்கோ கடந்த தென்மொழி [சுவடி 9, ஓலை 3-4] இதழில் மக்களவைப் பகுதியில் எழுதிய ம. 120 எண்ணுடைய மடலை மருத்துவத்துறையில் ஈடுபாடுடைய தென்மொழி அன்பர் சிலர் பார்த்திருக்கக்கூடும். அம்மடல் வழி கிரே உடற்கூறு [Gray's Anotomy] நூலை ஒரு கூட்டுமுயற்சியால் தூய தமிழில் மொழி பெயர்த்திட அவர் விடுத்த வேண்டுகோளை, மருத்துவம் பயிலும் மாணவர்களும், அத்துறையில் பணியாற்றும் தமிழார்வமுடைய பேராசிரியர்களும் தங்களுக்கிட்ட சூளுரையாகக் கொண்டு செய-லாற்றி, பல்வகை சிறப்பும் கொண்டு மிளிரும் தமிழ்மொழிக்கு அறிவியற்சிறப்பும் ஊட்டுமாறு, தென்மொழி வேண்டிக்கொள்கிறது.

கிரேயின் உடற்கூறு நூல் (34-ஆம் பதிப்பு) மொத்தம் 9 படலங்களையும் 1600 பக்கங்களையும் கொண்டதோர் அரிய நூலாகும். அவ்வொன்பது படலங்களையும் மொழிபெயர்க்க விரும்பும் மாணவர்களையும் பேராசிரியர்களையும், ஒன்பது குழுக்களாகப் பகுத்துக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பேராசிரியரைத் தொகுப்பாசிரியராகக் கொள்ளலாம்: நூல் ஒழுங்கு பெறச் செப்பமாக மொழி பெயர்க்கப் பெற்றபின், அதனைப் பதிப்பிடும் வேலையைச் சிறந்ததொரு நூல்வெளியீட்டுக் குழுமத்-திடம் ஒப்படைக்கலாம். அதுகால் பதிப்பாசிரியர் குழு ஒன்று அமர்த்தப்பெறும்.

வகுக்கப்பெற்ற ஒன்பது குழுக்களிடமும் நூலின் ஒன்பது படலங்களையும் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு படலத்திலும் உள்ள பக்கங்களில் 40 அல்லது 80 பக்கங்களுக்கு ஒருவர் மேனி மொழி பெயர்க்க விரும்பும் மாணவர்களை அமர்த்திக் கொள்ளலாம். மாணவர்கள் ஒவ்வொருவரும் தமக்குப் பகுத்தளிக்கப்பெறும் பகுதி-களை இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மொழி பெயர்த்து விடலாம். அவர்கள் தம் பெயர்ப்பு வேலையைத் தொடங்கு முன்

பேராசிரியர்களை உள்ளிட்ட அனைவரையும் ஓரிடத்தில் கூட்டி, அவர்கள் மொழி பெயர்க்க விரும்பும் முறை, மொழிபெயர்ப்பில் கையாளப் பெறவேண்டிய கலைச்சொற்கள், முதலியவற்றைப்பற்றிக் கலந்துரையாடல் நிகழ்த்தப்பெறும். அக்கூட்டத்தைத் தென்மொழி அமைத்துத் தரும். தேவையானால் இரண்டு மூன்று கூட்டங்களும் நடத்தப்பெறலாம். அவர்கள் மொழி பெயர்க்க வேண்டிய நூலின் படலங்களும் பக்கங்களும், தேவையான தொகுப்பாசிரியர்கள், மாணவர்கள் எண்ணிக்கைகளும் கீழே கொடுக்கப் பெறுகின்றன.

எண்.	படலங்கள்	பக்கங்கள்	தொகுப்பாசிரியர்	மாணவர்
1	இழைமவியல் Histology	80	1	2
2	கருவியல் Embryology	160	1	4
3	என்பியல் Osteology	240	1	6
4	மூட்டியல் Syndesmology	80	1	2
5	தசையியல் Myology	160	1	4
6	குழையியல் Angiology	240	1	6
7	நரம்பியல் Neurology	320	1	8
8	உணர்ச்சி உறுப்புகளும் தோலும் Sense Organs & skin	80	1	2
9	பூதியியல் Splanchnology	240	1	6

இத்திட்டத்தின்படி நமக்குத் தேவையான மாணவர்கள் நாற்பதின்மரே! ஒவ்வொருவரும் எண்பது பக்கங்கள் மொழி பெயர்ப்பதாயின் இருபதின்மரே போதும். தேவையான ஒன்பது பேராசிரியர்களும் முன்வராவிடத்து குழுவிலுள்ள முதிய மாணவரைத் தொகுப்பாசிரியராக அமர்த்தி விடலாம். எனவே இதில் ஈடுபாடும் ஆர்வமும் தமிழ்ப்பற்றும் உள்ள மருத்துவத்துறைப் பேராசிரியர்களும் மாணவர்களும் இதுபற்றித் தங்கள் விருப்பங்களைத் தென்மொழிக் கெழுதி இவ்வரிய பணி முற்றுப்பெற ஒல்லும் வகையால் துணை நிற்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

'தென்மொழி' கடலூர்-1.
1—11—71

அன்பன்,
பெருஞ்சித்திரன்.

ஊக்காது. அங்ஙனமிருக்க, தாங்கள் வலிந்து கூறிய அக்கூற்றை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பன்னாட்களாகக் கள்ளச் சாராயம் காய்ச்சிக் காவலர்களால் பிடிக்கப்பட்டுத் துன்புழுற்றமக்கள் இனித் தாராளமாக அரசினரால் நடத்தப்படும் மதுக்கடைகளில் குடிக்கலாம். மதுவுண்பவர்க்கே மதுவன்றி அருந்தாத அறிஞர்களை அது தூண்டாது. இந்நாவலந்தீவு முழுவதும் செயற்படாத மதுவிலக்கை ஒரு மாநிலமட்டும் செவ்வனே செய்யமுடியாது. அதைத் தீரஆய்ந்த பிறகே மதுவிலக்குக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசைத் தாங்கள் வாழ்த்தாவிட்டலும் தாங்கள் அருள் செய்து தாழ்த்தாதீர்கள்! —சி. மு. அன்புக்கரசன் பெங்களூர்., 2. ஏ.

0· 272: செந்தமிழ்ப் பாவலரே, வணக்கம்! 'காஞ்சி' இதழ் இறுதியாக உங்களைத் தூற்றி எழுதி முடித்துக்கொண்டது. நீங்கள் பதவி வெறியர் என்று 'பச்சைப் பதவி வெறிபிடித்த' ஓநாய்கள் உங்களைப் பார்த்துக் குரைக்கின்றன. அதைப்பற்றி எள்ளத்துணையும் கவலை வேண்டா. பதவி வெறியினால்தான் இன்று தி. மு. க. அரசு 'திராவிடநாடு' உரிமைக் கொள்கையைக் குழியிலிட்டுப் புதைத்தது. இக்கூட்டத்தில் உள்ள சிலதுகள் போடும் கூச்சலைக்கண்டு கவலைப்பட வேண்டா. தமிழகம் தனி நாடாகவேண்டி நாம் போராட முன்வந்தால் இந்த தி. மு. க. 'தனித்தமிழர்களே' நம்மைச் சிறையிலடைப்பார்கள். அஞ்சாமல் தமிழர் நலம் கருதி எழுதுங்கள். வாழ்க உங்கள் வீர எழுத்தோவியங்கள்! – தி. நா. அறிவுரசு, திருப்பூர்–2

0: 273: தமிழினிய ஐயா, தலைதாழ்ந்த வணக்கம். நலம் சூழ்க! அண்மையில் வந்த தென்மொழியின் ஆசிரியவுரை எனக்குப் புதியதோர் ஒளியூட்டி உள்ளது. பன்னெடு நாட்களாய் என் நெஞ்சிற்குப் புரியாத ஒரு புதிராக விருந்த இறைத்தன்மையை மெய்யறிவு கொண்டு மெய்ப்பொருளாக உணர்வு ததும்ப ஒள்ளிய ஆய்வுடன் சுட்டிக்காட்டியுள்ளீர்கள். அப்பாதையின் வழியை எம் போன்றோர்க்கு மிகத்தெளிவுறக் காட்டிவிட்டீர்கள். இதற்கு எத்தனைக் கோடி நன்றிகள் கூறுவதோ அறியேன். வாழ்க தங்கள் மெய்யறிவுத்திறன்! — நாவை-சிவம், கொடும்பாளூர்.

0: 274: சென்ற இரு திங்கள் "தென்மொழி"யின் ஆசிரியவுரைகளும் அட்டைப் பாடல்களும் தமிழ் உள்ளங்களில் ஓராயிரம் கோடி எண்ணங்களையும், உணர்வுகளையும் உருவாக்கிவிட்டன. தமிழ்ச்சிட்டில் வெளியான "ஆர்ப்பாட்ட உலகமடா" என்ற பாடல் "பொதுமை" நெஞ்சங்களை வலிவாக்குகிறது. இன்று, தங்களைக் குறைகூறியே பிழைகிக்ன்ற ஒரு கும்பல் இத்தமிழகத்திலே இருந்து வருகிறது. இரு கைகளைக் கொண்டே எழுஞாயிற்றின் பேரொளியை மறைத்துவிட எண்ணுவோர்க்கு நாம் இரக்கப்படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? ஆயிரம் இடர்ப்பாடுகள் எதிர்வரினும் தங்கள் பணி தொடரவேண்டும். — இரணியன், திருப்பூர்.

0: 275: ஐயா, நம் 'தென்மொழி'யின் சுவடி 9. ஓலை 3-4-இல் 'நமக்கு வந்த மடல்கள்' பகுதியில் மறைமலையடியுறை, நா. காமாட்சி அடியான், க. காந்தி, தி. நா. நாகமணிச்செல்வன், பா. செந்தமிழ்

(அடுத்தபக்கம் பார்க்க)

வேங்கை, பாவை நடவரசன், மணிநடவரசன், பொன்-மாறன் சாத்தனூர்க்கிழான், மு. ஆறுமுகம் ஆகியோரின் மடல்கள் சிறப்பாக இருந்தன. ஆனல் இவர்கள் வெறும் மடல்கள் மூலம் தங்கள் உணர்வைக் கொட்டுவதனுல் என்ன பயன்? செயலுக்கு முன் வரவில்லேயே? பாவாணர் அவர்களின் செ. சொ. பி. பேரகர முதலி உருவாக்க, வெளியீட்டுத் திட்ட உறுப்பினர் பட்டியலில் இவர்களின் பெயர்கள் இல்லேயே. இவர்கள் வேறு பெயர்களில் உள்ளார்களோ என்னவோ தங்களுக்குத்தான் தெரியும். சென்ற மாத இதழிலும் இம்மாத இதழிலும் 181 உறுப்பினர் பெயர்களே உள்ளது மிகவும் வருந்தத் தக்கதாகும். தாங்கள் திட்டமிட்ட இருநூறு உறுப்பினர்கள் இன்னும் சேராமல் இருப்பது உண்மைத் தமிழர்களின் செயலின்மையைக் காட்டுகிறது. அடுத்து வரும் இதழ்களிலாவது இவர்கள் பெயர்கள் இடம் பெற ஆவன செய்வார்களா?

தங்களின் 'செயலுக்கு முன் வருவோம்' என்ற பாடல் உண்மைத் தமிழர்களை செயல்படுத்துமா? தமிழில் நடத்தலாம் என்று சட்டமியற்றிய அரசிற்கு கோயில்களில் உள்ள ஆரிய இடைத்தரகர்களை அகற்றுவது கடினமன்று. பெரியாரின் மாண-வருக்குப் பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் பெரியாருக்கு பட்டம் வழங்காதது வியப்பாகவே உள்ளது. அவர் பெரும்பதவியில் இல்லை என்பது காரணியமாக இருக்குமா? மக்களவைப் பகுதியில் அன்பர் தி. நா. அறிவரசு என்பவர் 'தென்மொழி' இதழைத் தமிழக அரசு தமிழகத்தில் உள்ள நூல் நிலையங்களில் ஏன் வருவித்து மக்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று கேட்டுள்ளார். இதே கேள்வியைத் தான் நானும் கேட்கிறேன். 'மஞ்சரி' போன்ற தமிழ்க்கொலை இதழ்களை நூலகங்கள் வாங்கும்பொழுது 'தென்மொழி' போன்ற தனித்தமிழ் இதழ்களை வாங்கக் கூடாதா? மக்களின் வரிப்பணத்தைப் பெறும் நூலகங்கள் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ருமல் இருப்பது பெரும் வஞ்சமாகும்.

தாங்கள் எழுதி வரும் நூருசிரியப் பாடல்களைப் போல் வேறு எந்த இதழ்களிலும் வருவதாகத் தெரியவில்லை. புறநானூறு அகநானூறு பாடல்களைப் போல் நூருசிரியமும் நிலைத்து நிற்கும். தாங்கள் ஏறக்குறைய 15 ஆண்டுகளாக எழுதிவருவதைப் பாயிரம் பாடினேம் தனித்தமிழக்கே என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். தனித்தமிழுக்கு நல்ல பாவியம் பாட எத்தனை ஆண்டுகள் ஆகுமோ? அது தமிழ்ப் புலவர்களுக்குத்தான் தெரியும். பாவாணர் அவர்களின் செ. சொ. பி. பேரகரமுதலி உருவாக்க, வெளியீட்டுத் திட்ட உறுப்பினர் பட்டியலில் பெங்களூர் உ. த. க. கிளையின் பெயர் மட்டுமே காணப்படுகிறது. தமிழகத்தில் உள்ள உ. த. க. கிளைகள் என்ன செய்கின்றன?

தென்மொழியன்பன், உளங்கவரழகன், இராசிபுரம்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.